19 வது வருடத்தில்

# விளம்பரம் ™
VLAMBARAM ™

416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978



Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
HOMELIFE HIGHER STANDARDS
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666



வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton
சந்திப்புக்கு அருகாமையில்



நதி 19 பாலம் 02 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JANUARY 15, 2009


# நன்றி நவிலும் நாள் தைப்பொங்கல்

தமிழர்களால் மதவேறுபாடு இன்றி கொண்டாடப்படும் தமிழிற்கு தைமாதம் 1ஆம் திகதியான தைப்பொங்கல் தமிழர்களின் நன்றி நவிலும் நாள் (Thanks Giving Day) ஆகும். இது வழக்கமாக விவசாயத்தை முதன்மை தொழிலாகக் கொண்ட மக்களால் புதிதாக அறுவடை செய்யப்பட்ட புது நெல்லில் இருந்து எடுக்கப்பட்ட அரசியில் பொங்கி தங்களுக்கு உதவிய சூரியனுக்கு நன்றி செலுத்துவதற்காக செய்யப்படும் விழாவாகும். இதை தொடர்ந்து தங்களுக்கு உதவிய மாடுகளுக்கு நன்றி செலுத்துவார்கள்.

இப்பொங்கல் விழாவை உலகெங்கும் வசிக்கும் தமிழ் மக்கள் மட்டும் அல்லாமல் பஞ்சாப் (Punjab) மற்றும் ஹரியானா (Hariyana) மக்களால் Lohri விழாவாகவும் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவும் நெல்விளையும் இப்பிரதேசங்களில் அறுவடை முடிந்தவுடன் நன்றி செலுத்துவதற்காகவே ((Thanks Giving Day) கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் இவர்கள் நெருப்பு மூட்டி அக்கினிக்கு ஐந்துவகை உணவை பிரசாதமாக நெருப்பில் இட்டு நன்றி தெரிவிப்பார்கள்.

இதே நன்றி தெரிவிக்கும் விழா வெவ்வேறு பெயரில் வெவ்வேறு பிரதேசங்களில் கொண்டாப்படுகிறது. Bhugali Bihu என்று (Assam) மாநிலத்திலும் Bhogi என ஆந்திரப் பிரதேசத்திலும், சங்கராந்தி (Sankranthi) என கர்நாடகா, கேரளா மாநிலங்களிலும் கொண்டாடப்படுகிறது.

இவ் அறுவடை விழா Burma, Cambodia மற்றும் Korea நாடுகளிலும் (Thanks Giving Day)ஆக கொண்டாடப்படுகிறது. இங்கு நாங்கள் முக்கியமாக கவனிக்க வேண்டியது ஆங்கில ஜனவரி மாத நடுப்பகுதியில் வரும் இப்பொங்கல் விழா தமிழர்களுக்கு மட்டுமல்லாது உலகிலே நெல்விளையும் இடங்களில் எல்லாம் (ஆசியா மக்களின் பிரதான உணவு அரிசி என்பது உங்களுக்கு தெரியும்) புது அறுவடை முடிந்தவுடன் நன்றி நவிலும் ((Thanks Giving Day) நாள் ஆக வெவ்வேறு பெயர்களில் கொண்டாடப்படுகிறது.

பொங்கல்விழாவைப்பற்றி குறிப்பிடும் ஆங்கில அகராதி ஒன்று இது கிட்டத்தட்ட 2000 வருடங்களாக கொண்டாடப்படுகிறது என்பதற்கு அகழ்வாராய்ச்சியில் எடுக்கப்பட்ட எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ள கல்லால் செய்யப்பட்ட பாண்டங்களில் துண்டுகள் சாட்சியாக உள்ளது. (Epigraphic Evidence) என்கிறது.

இவ் அறுவடை முடிந்து நன்றி நவிலும் விழாவை ஆசிய மக்கள் எவ்வாறு பெயரிட்டுக் கொண்டாடினாலும் எல்லோருக்கும் இதை கணிப்பதற்கு விஞ்ஞான (வானசாத்திர முறையையே கைக்கொள்கிறார்கள். பூமி சூரியனை சுற்றி வலம் வரும்போது பூமியில் இருந்து சூரியனை பார்க்கும் போது சூரியன் இருக்கும் இடத்தை குறிப்பதற்காக சூரியனுக்கு பின்னால் உள்ள நட்சத்திரக் கூட்டங்களை அக்காலத்து மக்கள் 'அடையாளமாக வைத்தார்கள். இவ் நட்சத்திரக் கூட்டங்கள் (Consternation) தமிழில் இராசிகள் என கூறப்படும்.

ஒவ்வொரு மாதமும் சூரியன் நிற்கும் இடத்திற்கு பின்னால் உள்ள நட்சத்திர கூட்டங்கள் அக்கூட்டங்கள் எவ்வடிவில் மக்களின் கண்ணுக்கு புலப்பட்டதோ அவ்வடிவங்களின் பெயரில் அழைக்கப்பட்டது. அதாவது அந்த நட்சத்திரக் கூட்டம் தராசு வடிவில் தெரிந்ததால் துலாம் (Libra) என்றும் மீன்வடிவில் தெரிந்தால் மகரம் (Capricorn) என்றும் அழைத்தார்கள். இவ்வாறுதான் 12 இராசிகள் வந்தன. தைப்பொங்கல் அல்லது தைமாதம் முதலாம் திகதி என்பது சூரியன் மகர இராசிக்கு செல்லும் முதலாவது நாள் ஆகும். இது எந்த சமயத்திற்கோ மொழிக்கோ சம்பந்தம் இல்லாதது. இயற்கையாக (பூமியிலிருந்து பார்ப்போருக்கு) சூரியன் ஒரு குறிப்பிட்ட (மகர இராசிக்கு) இடத்திற்கு


**தொடர்ச்சி 03ஆம் பக்கம்**


## அரச பயங்கரவாதம் தோற்கடிக்கப்படாவிட்டால் நாடு விரைவில் சுடுகாடாக மாறிவிடும்

கொலைக்களமாக மாறியுள்ள இலங்கையை மீட்டெடுத்து ஜனநாயகத்தை உறுதி செய்வதற்கு அனைத்துச் சக்திகளையும் ஓரணியில் திரளுமாறு அழைப்பு விடுத்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரச பயங்கரவாதம் உடனடியாக தோற்கடிக்கப்படாவிட்டால் நாடு சுடுகாடாக மாறும் நிலை ஏற்பட்டுவிடுமென எச்சரிக்கை விடுத்தார்'
சண்டே லீடர் பிரதம ஆசிரியரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான லசந்த விக்கிரமதுங்கவின் இறுதிச் சடங்கு திங்கட்கிழமை மாலை பொரளை கனத்தை பொதுமயானத்தில் நடைபெற்றபோது இரங்கலுரை நிகழ்த்துகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

லசந்த விக்கிரமதுங்கவின் பூதவுடலுக்கு முன்னால் அலைமோதிய பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் இரங்கலுரை நிகழ்ச்சி இடம்பெற்றது. அங்கு தொடர்ந்து உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க கூறியதாவது "லசந்த விக்கிரமதுங்கவுக்குப் பிறகு இன்னொரு படுகொலை விழுவதை எவரும் அனுமதிக்கக்கூடாது. லசந்த விக்கிரமதுங்க ஊழல் மோசடியில் ஈடுபடவில்லை. ஊழல் மோசடிக்கு எதிராக குரல் கொடுத்தார். மனித உரிமைகளை மீறவில்லை. அதற்கு எதிராக எழுதினார். மக்கள் மீது அடக்குமுறையை பிரயோகிக்கவில்லை. மாறாக அதனை எதிர்ப்பதற்கு தனது பேனையை பயன்படுத்தினார். இன்று அரச பயங்கரவாதம் லசந்தவை படுகொலை செய்துவிட்டது. கடந்த காலத்தில் லசந்தவுக்கு ஜனாதிபதி பல தடவைகள் அச்சுறுத்தல் விடுத்துவந்துள்ளார். கீத் நொயாரைத் தாக்கியதன் மூலமும் ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்துவதன் மூலமும் எச்சரித்துள்ளார். இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் லசந்த தைரியமாக தனது பேனையையும் கடதாசியையும் அராஜகத்துக்கு எதிராக பயன்படுத்தினார்."

"லசந்தவின் படுகொலைக்கு முழுப்பொறுப்பையும் ஜனாதிபதியே ஏற்கவேண்டும். மக்களுக்காக பேசிய ஒரு குரல் இன்று மௌனமாக்கப்பட்டு விட்டது. நாடு இன்று ஹிட்லர் காலத்தில் ஜேர்மனியைப் போன்று மாறியுள்ளது. நாட்டை பேரழிவிலிருந்து காப்பாற்ற வேண்டிய தருணம் உருவாகியுள்ளது. மக்கள் கொன்று குவிக்கப்படுவதை நாம் பார்த்துக் கொண்டிருப்பதா? அல்லது அரசியல்


**தொடர்ச்சி 02ஆம் பக்கம்**



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.



துரித பணமாற்றுச் சேவை
- 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
- கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
- தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை


வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
416.267.8221




REALTY EXECUTIVES
Sri Jayasiri
Broker of Record/President
Direct: 416-939-4343
Office: 905-209-7500
Fax: 905-209-7501
Realty Executives GTA Ltd. Brokerage
Executive Mortgage Inc.
HSBC Tower, Liberty Square
3601 Highway 7 East, Suite 1005
Markham ON L3R 0M3
Each office is independently owned and operated.



STANDARD MORTGAGES INC
ANANDA, M.Com, CA
Mortgage Specialist / Financial Consultant
Direct: 416-319-2520

Reliance
Financial & Investment Co Inc
MORTGAGES
▶ Residential ▶ Commercial ▶ Line of Credit ▶ Low Interest ▶ 40 Lenders ▶ Pre-approval ▶ Re-finance ▶ Debt Consolidation ▶ Bad or No Credit OK ▶ Self-employed OK ▶ New Immigrant OK ▶ Private Funds also OK
We GET YOU MORTGAGE even if Banks say 'No'
INSURANCE
▶ All Insurance Companies ▶ Life ▶ Critical illness ▶ Disability ▶ Health & Dental ▶ Travel ▶ Visitors ▶ Mortgage
RESP ▶ Govt. grants ▶ Highest scholarships paid ▶ Flexible
RRSP ▶ Excellent growth ▶ Reduced taxes ▶ Investment loans
Don't miss our FREE SEMINAR on RRSP & REDUCING TAXES
Email: reliancefico@ymail.com, Fax: 647-342-2399



அடமானக் கடன் செய்து கொடுப்பதே என் பணி!

Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM Veedu Mortgages Inc.




Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated




கதிர்
GTA Square
SOLD OUT !
Last 7 Units Available
Middlefield & Finch

Don't Miss Out
24hr. 416.856.6900
Office: 416.321.6969
Email: kathirs@rogers.com
Call me for a change
Kathir S. Kathirkamanathan P.Eng.
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
1711 McCowan Rd., #206, Toronto
Independently owned & operated



வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# 2009 பொருளாதாரப் பலன்கள்

நாளை என்ன நடக்கும் என்று தெரியாத நிலையில் ஓராண்டில் என்ன நடக்கலாம் என்று கணிப்பது சற்றே சிரமமான காரியம். ஆனாலும் பலபேர் 2009 எப்படி இருக்கும் என்று கணித்திருக்கிறார்கள். கணிப்பு எனும் போதே ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் நிலவும். இதில் எது சரி? எது தவறு? என்பதை 2009 முடிந்த பிறகுதான் கூறமுடியும். ஆனாலும் திட்டமிடலுக்கு ஒரு எதிர்பார்ப்பு தேவைப்படுகின்றது. நான் படித்த, கேட்ட, சிந்தித்த 2009 பலன்களைத் தொகுத்துக் கீழே தருகிறேன். இவை உண்மையாகும் என்பதற்கு உத்திரவாதம் இல்லை.

உலகப் பொருளாதாரமும், கனடிய பொருளாதாரமும் தொடர்ந்து மந்த நிலையிலேயே இருக்கும் என்பது பலரின் கணிப்பு. பெரும்பாலான பொருட்களின் விலைகள் குறைந்த நிலையிலேயே இருக்கக் கூடும். எண்ணெய் விலைகளில் சற்றே உயர்வு ஆண்டு இறுதியில் தென்படலாம். ஆனாலும் பழைய நிலைக்கு ஒருபோதும் 2009 ஆம் ஆண்டில் எண்ணெய் விலைகள் திரும்பாது.

பொருளாதார சிக்கல் நீடிக்கும் வரை அமெரிக்க டொலர் வலுவுடன் இருக்கலாம். ஆனால் அந்த நிலை எந்த சமயமும் மாறக்கூடிய அபாயமும் உள்ளது. அமெரிக்க அரசின் வரவுக்கு மீறிய செலவுகள் அதற்குக் காரணமாக அமையலாம். இதுவரை பொருளாதார ரீதியில் அமெரிக்காவுக்கு கிடைத்து வந்த தலைமையிடம் சற்றே மாறத்துவங்கியுள்ளதாகத் தோன்றுகின்றது. இங்கிலாந்து நாட்டின் நாணயமான ஸ்டேர்லிங்கும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. ஸ்டேர்லிங்கின் இறுதி நாட்கள் நெருங்குவதாகக் கூறுவோரும் இல்லாமல் இல்லை. அமெரிக்க டொலர் தலைமையிடத்தை இழக்கும் போது அந்த இடத்தை யூரோ நிரப்புமா என்று தெரியவில்லை. கனிமவளம் நிறைந்த கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் நாணய மதிப்பும், பொருட்களின் விலை சரிவால் சரிவைச் சந்தித்துள்ளன.



## பெரி. முத்துராமன்

வேடிக்கையாக ஒருவர் சொன்னார், 'கனடிய நாணயத்தின் ஏற்ற இறக்கங்களை காஸ் விலை ஏற்ற இறக்கத்தை வைத்தே கூறிவிடலாம்.' அது உண்மை என்றே தோன்றுகின்றது. திரும்ப எண்ணெய் விலைகள் ஏறும்போது கனடிய நாணயத்தின் மதிப்பும் உயரக்கூடும்.

தங்கத்தின் விலையும் தொடர்ந்து கீழ்நிலையிலேயே இருந்து வருகின்றது. இந்த நிலை தொடரமுடியாது. அமெரிக்க டொலரின் வீழ்ச்சியும், தங்கத்தின் ஏற்றமும் வெகுதொலைவில் இல்லை என்று கூறுவோரும் உள்ளனர்.

உலகின் பல நாடுகளில் வட்டி வீதங்கள் மிகக்குறைவாக உள்ளன. அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் வட்டி வீதங்கள் ஒரு சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளன. இதை மேலும் குறைப்பது என்பது சாத்தியமில்லை. கனடாவிலும் வட்டி வீதங்கள் தொடர்ந்து குறைந்த நிலையிலேயே இருந்து வரும். பெரிய அளவில் கனடாவில் வட்டி வீதங்களில் 2009இல் மாற்றம் ஏற்பட வாய்ப்பு மிகக் குறைவு.

முதல் முறை வீடு வாங்குவோர்க்கு இது நல்ல செய்தி. வீட்டு விலைகளும் தொடர்ந்து விழும் என்றே நம்பப்படுகின்றது. எவ்வளவு விழும் என்பது தான் கேள்வி. அமெரிக்காவைப் போன்று கனடாவில் பெரிய வீழ்ச்சி இருக்காது என்றே நம்பப்படுகின்றது. கனடாவில் அல்பேட்டா, சஸ்கட்சுவன், பிரிட்டிஷ் கொலம்பியா, மனிற்றோபா (Alberta, Sasketchwan, British Columbia, Manitoba) போன்ற பகுதிகளின் விலை வீழ்ச்சி ஒன்ராரியோவை விட அதிகமாக இருக்கும் என்று நம்புகிறார்கள்.

பங்குச் சந்தையிலும் தென்படும் அடிமட்டம் உண்மையானதா என்று தெரியவில்லை. மேலும் விலைகள் வீழ்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் பங்குச் சந்தையில் முதலீடு செய்ய விரும்புவோர், மூன்று அல்லது நான்கு தவணைகளில் 2009 இல் முதலீடு செய்யலாம். அது ஓரளவுக்கு இலாப நட்டங்களைச் சமன்படுத்தக்கூடும்.

மொத்தத்தில் 2009 கவனத்தோடு செயல்பட வேண்டிய ஒரு ஆண்டாகும். அதன் அடிப்படையில் சில ஆலோசனைகள்

1. தேவையற்ற செலவுகளைத் தள்ளிப்போடுங்கள்.

2. சேமிப்பை அதிகரியுங்கள், கடன்களைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

3. கடன் வாங்கி பங்குச் சந்தையிலோ, பிற இடங்களிலோ முதலீடு செய்வதைத் தவிர்க்கவும்.

4. முடியுமானால் வரி இல்லா சேமிப்புக் கணக்கில் சேமியுங்கள். ஆண்டுக்கு 5000 டொலர்கள் வரை குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு 18 வயதுக்கு மேற்பட்டவர்களின் பேரிலும் சேமிக்கலாம்.

5. கூடுதல் வருமானம் உள்ளவர்கள் . ஆ ர் . ஆ ர் . எ ஸ ் பி யி ல் மாதந்தோறும் சேமிக்கலாம்.



மேலும் விபரம் அறிய விரும்பினால் தொடர்பு கொள்ள கட்டுரை ஆசிரியரின் தொலைபேசி எண் 416.439.3040 Ext 2010

# அரச பயங்கரவாதம்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

முரண்பாடுகளை மறந்து ஒன்றுபட்டு அராஜக ஆட்சிக்கு முடிவு கட்டுவதா என்பதைப் பற்றி உடனடி முடிவெடுக்கப்படவேண்டும். லசந்தவின் பூதவுடலுக்கு முன்பாக இருந்து நாம் இன்று உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும். ”

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இக்குற்றச்சாட்டை அவர் முன்வைத்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் ""த சண்டே லீடர்" ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பான விசாரணையை வழமைபோல் கைவிட ஜனாதிபதி முயற்சி செய்து வருகிறார். கொலையாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான எந்த நடவடிக்கையையும் ஜனாதிபதி எடுக்கவில்லை. லஸந்த கொல்லப்பட்ட செய்திக்கு பத்திரிகைகளில் அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டாம் என்று பத்திரிகை ஆசிரியர்களிடம் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஜனாதிபதி கூறியிருக்கின்றார். ஒரு பிரபல தனியார் பத்திரிகை ஆசிரியர் ஒருவரை ஜனாதிபதி தொலைபேசி மூலம் மிரட்டி இச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டாம் என்று உத்தரவிட்டமை எமக்குத் தெரியவந்துள்ளது. ஆனால், மறுபுறம் லஸந்த தனது நெருங்கிய நண்பன் என்று காட்டிக் கொள்ளவும் அவர் முற்படுகிறார். லஸந்த அண்மைக்காலமாக அரசில் இடம்பெற்ற பாரிய மோசடிகளை மிகத் துணிச்சலுடன் அம்பலப்படுத்தியிருந்தார் .

அதுமாத்திரமன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஜோஸப் பரராஜசிங்கம் மற்றும் ரவிராஜ் ஆகியோரைக் கொலை செய்தவர்கள் பற்றிய தகவல்களையும் லஸந்த திரட்டியிருந்தார்.

இதன் காரணமாகத்தான் லஸந்த கொல்லப்பட்டார். இந்தக் கொலை நன்கு திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைசின் செயலாளரே இக் கொலைக்கு முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் "சிங்க மாபியா", "பிசாசுப் படையணி" மற்றும் "கே - 09" என்ற வெவ்வேறு பெயர்களில் ஆயுதக்குழுக்கள் இயங்குகின்றன என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இந்த ஆயுதக்குழு நன்கு பயிற்றப்பட்டது. இந்த ஆயுதக்குழுவில் முக்கிய படை அதிகாரிகள் பலர் உள்ளனர்.

இந்தக் குழுவில் உள்ள "நேவி சம்பத்" என்ற அதிகாரியே கொலைசெய்யப்பட வேண்டியவர்களின் விவரங்களைத் திரட்டுகிறார்.

கொலை செய்யப்பட வேண்டியவர்களின் நடமாட்டம் இவரால் நன்கு அவதானிக்கப்படுகிறது. எனது நடமாட்டமும் கூட இவரால் நன்கு அவதானிக்கப்படுவதாகத் தெரிகிறது.

இந்தக்குழு தொடர்பாக லஸந்த முழு விவரங்களையும் திரட்டியிருந்தார். இந்த விவரங்கள் அம்பலப்படுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்காகவே, லஸந்த இந்த விசேட பயிற்சி பெற்ற ஆயுதக்குழுவால் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றார்" என்று தெரிவித்தார்.

இலங்கையின் இன்றைய நிலைமையை முன்னைநாள் ஜனாதிபதி சந்திரிகாவும் விமர்சனம் செய்துள்ளார்.

" தென் பிரதேசங்களில் இருக்கும் கொலையாளிகள் சிலரை ஏன் அரசாங்கத்தால் பிடிக்கவோ அடக்கி ஒடுக்க முடியாது?" முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்க கேள்வி எழுப்பியிருக்கிறார்.

படுகொலை செய்யப்பட்ட "சண்டே லீடர்" பத்திரிகையின் பிரதம ஆசிரியரான லசந்த விக்கிரமதுங்கவின் பூதவுடலுக்கு பத்தரமுல்லையிலுள்ள அன்னாரது பாரியாரின் வீட்டில் வைத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இறுதி அஞ்சலி செலுத்தியதன் பின்னரே சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு தெரிவித்திருக்கிறார் .அவர் இங்கு மேலும் பேசுகையில்

இது ஜனநாயகத்துக்கும் நாட்டின் சுதந்திரத்துக்கும் விழுந்த பாரிய அடியாகும். லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை மட்டுமல்லாது 2 தினங்களுக்கு முன்னர் வெட்கமில்லாமல் சிரச ஊடக நிறுவனத்துக்கும் தீ வைத்திருத்தினர். .

கடந்த 2 வருடங்களிலேயே நாட்டில் அதிகமான ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருக்கின்றன. ஊடகவியலாளர் கீத் நொயரை தாக்கிவிட்டு நாட்டை விட்டுச் சென்றனர். யாழ்ப்பாணத்திலும் அதிகமான ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டனர்.

அவர், இவர், சர்வதேச சதித் திட்டமென ஒவ்வொருவரையும் குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பதில் பலன் இல்லை. நாட்டில் 12 வருடங்களாக அரசாங்கத்தை நிர்வகித்தவரென்ற வகையில் நாட்டு மக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய முழுப்பொறுப்பும் அரசாங்கத்திற்குரியது. எனினும் இன்று நாடு படுகுழியில் விழுவதற்கு அரசாங்கமே இடமளித்திருக்கின்றமை குறித்து நான் கவலையடைகின்றேன். .

லசந்த விக்கிரமதுங்கவுக்கும் எனக்குமிடையில் பல பிரச்சினைகள் இருந்தன. எனினும் அவரை, கொல்வேன் என்று நான் ஒரு போதும் தொலைபேசியில் மிரட்டியதில்லை. .

எனவே இந்த பயணத்தை நிறுத்த வேண்டும், நிறுத்தப்பட வேண்டும். ஏதாவதொன்று செய்தாக வேண்டும். வேண்டுகோள் விடுக்கிறேன். ஒவ்வொருவர் மீதும் பழி சுமத்தும் வகையிலான பொய்ப் பிரசாரங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

இன்று இதனை கூறியதற்காக நாளை எனக்கும் வீதியில் வைத்து என்ன நடக்குமென்று தெரியாது. கடந்த 3 வருடங்களில் எனது பாதுகாப்பும் குறைக்கப்பட்டுள்ளது. எனினும் செய்வதற்கு ஒன்றுமில்லை. உண்மை பேச வேண்டும் என்று கூறினார். .

இலங்கையின் தெற்கு நிலைமைகள் இவ்வாறு இருக்க வடக்கில் முல்லைத்தீவு பகுதியில் தினமும் மக்கள் இலங்கை இராணுவத்தின் எறிகணைகளால் உயிர் இழந்து வருகின்றனர். சில சமயங்களில் ஒரே குடும்பத்தைத் சேர்ந்த பலர் பலியாகிப் போகின்றனர்.

இந்த நிலைமையில் புதிய அமெரிக்க ஜனாதிபதி, மற்றும் புதிய அமெரிக் வெளியுறவு செயலாளரான திருமதி ஹில்லாறி கிளிண்டன் அம்மையாருக்கும் உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் விண்ணப்பம் ஒன்றை மின்னஞ்சல் மூலம் அனுப்பும் முயற்சி நடைபெற்று வருகின்றது.

அமெரிக்காவில் இயங்கும் "ஒபாமாவுக்கான தமிழர்கள்" (Tamils for Obama) என்ற அமைப்பு, அமெரிக்க அரச தலைவராகத் தேர்வாகியுள்ள பராக் ஒபாமாவுக்கும் அமெரிக்க வெளியுறவுச் செயலராக நியமனம் பெறுகின்ற திருமதி ஹில்லாறி கிளிண்டன் அம்மையாருக்கும் அனுப்புவதற்கான ஒரு மனுவிற்காக கையெழுத்து வேட்டையில் இறங்கியுள்ளது. தமிழர்களின் சார்பில் அனுப்பப்படவுள்ள இந்த மனுவில் ஒரு வாரத்திற்குள்ளாகவே 44 ஆயிரம் பேர் வரை கையெழுத்திட்டிருப்பதாக தெரியவருகின்றது.

இணையம் ஊடாக கையெழுத்துக்கள் சேகரிக்கப்படும் இக்கடிதம் .

- தமிழர் தேசிய இனப் போராட்டத்தையும், ஈழத் தமிழர்கள் இன்று எதிர்நோக்கியிருக்கும் இனப் படுகொலை அபாயத்தையும் எடுத்து விளக்குவதுடன்
- இலங்கைப் பிரச்சினையில் தாமதமின்றி தலையிட்டு, தமிழினப் படுகொலையை நிறுத்தி

தமிழர்களுக்கு நீதி கிடைக்க உடனடியாக வழி செய்யுமாறும் அமெரிக்காவின் புதிய அரச தலைவரையும், வெளியுறவுச் செயலரையும் கேட்டுக்கொள்கின்றது .

"உலகம் எங்கும் பரந்து வாழும் தமிழர்கள் ஒவ்வொருவரையும் இதில் கையெழுத்து இடுமாறு நாம் வேண்டுகின்றோம். ஒரே குடும்பத்தில் இருந்தாலும் தனித்தனியான ஒவ்வொருவரது கையெழுத்தும் மிகவும் பெறுமதி வாய்ந்தது. அது அவர் அவரது கருத்தைப் பிரதிபலிப்பதாக அமையும். அதனால் ஒவ்வொரு தமிழரும் இதில் கையெழுத்திடல் வேண்டும்." என்று "ஒபாமாவுக்கான தமிழர்கள் அமைப்பின்" ஊடகத் தொடர்பாளர் புதினத்திடம் தெரிவித்தார்.

தொடர்ச்சி 04ஆம் பக்கம்

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ்.
விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga -905.712.2666



# நன்றி நவிலும்...


01ஆம் பக்கத்தொடர்ச்சி

செல்லும் நாளே தைமாதம் முதலாம் திகதியாகும்.

இப்போது நீங்கள் கேட்பது புரிகிறது. 12 இடங்கள் (இராசிகள், Constellations) இருக்க இந்த மகர ராசிக்கு சூரியன் போவதில் மட்டும் என்ன சிறப்பு இருக்கிறது? இதை ஏன் ஆசிய மக்கள் கொண்டாடுகிறார்கள்? இதற்கு நாங்கள் மீண்டும் விஞ்ஞானத்தை (வானசாத்திரம்) தான் துணைக்கு அழைக்க வேண்டும். ஏன் என்றால் இது மதம் மற்றும் மொழிக்கு அப்பாற்பட்ட ஒரு பொது நிகழ்வு அல்லவா!.

உங்களுக்கு தெரியும் இவ்விழாவை கொண்டாடும் ஆசிய மக்கள் எல்லோரும் பூமத்திய ரேகைக்கு வடக்கில் உள்ளவர்கள் பூமி சூரியனை சுற்றும் போது அது பூமியில் உள்ளவர்களுக்கு வருடத்திற்கு ஒரு தடவை வடக்கு நோக்கி கடகராசி (Cancer) வரையும் சென்று பின்னர் தெற்கு நோக்கி மகரராசி (Capricorn) வரையும் வருவதாக தெரியும். இது பூமியின் அச்சு 23 1/2 பாகை சரிந்திருப்பதால் நடக்கும் நிகழ்வு. பூமத்தியரேகைக்கு வடக்கிலுள்ள ஆசியமக்களுக்கு சூரியன் பூமத்திய ரேகையிலிருந்து வடக்கு நோக்கி கடகராசி வரை சென்று திரும்பவும் பூமத்திய ரேகைக்கு வரும் வரையும் உள்ள காலநிலை வசந்த காலமாகவும் கோடைகாலமாகவும் இருக்கும். ஆனால் பூமத்திய ரேகையிலிருந்து சூரியன் தெற்கு நோக்கி செல்லும் போது இலை உதிர்காலம் ஆரம்பித்துவிடும். இவ்வாறு தெற்கு நோக்கி போகும் சூரியன் மகரராசியை தொட்டவுடன் அதாவது தைமாதம் முதலாம் திகதி வந்தவுடன் தனது தெற்கு நோக்கிய பயணத்தை முடித்துவிட்டு வடக்கு நோக்கி நகர ஆரம்பிக்கும். இதுவே ஆசிய மக்களின் கொண்டாட்டத்திற்கான காரணமாகும். அதாவது சூரியன் வடக்கு நோக்கிய தனது பயணத்தை ஆரம்பித்து விட்டார் விரைவில் நமக்கு வசந்தகாலமும் கோடைகாலமும் வரப்போகுது என்பதே மகிழ்ச்சிக்கும் கொண்டாட்டத்திற்கும் காரணமாகும்.

இவ்வாறு சூரியன் தனது உத்தராயணம் (வடக்கு) நோக்கிய பயணத்தை ஆரம்பித்த நாளே தைப்பொங்கல் நாளாகும். அதாவது தைப்பொங்கல் தினம் கணிப்பது ஒரு இயற்கை



நிகழ்வை விஞ்ஞான பூர்வமாக கணிப்பதே ஆகும். இதை பெரும்பாலான ஆசிய மக்கள் நன்றி நவிலும் நாளாகவே கொண்டாடுகிறார்கள்.

இதை இன்னொரு விதத்தில் கூறுவதானால் தெற்கு நோக்கி பயணித்த சூரியன், தொடர்ந்தும் தெற்கு நோக்கி சென்று மக்களுக்கு கஷ்டத்தைக் கொடுக்காமல் வடக்கு நோக்கி திருப்பியதற்காக சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் விழாவாகவும் கூறலாம். இது ஆங்கிலேயரின் (Thanks giving Day)இற்கு சமமானது. இதை தமிழர்களின் வருடப்பிறப்பாக கருதுவது முற்றிலும் தவறு. தமிழ்மறையை தந்த திருவள்ளுவர் பிறந்த தினம் இதுவரை ஒருவருக்கும் தெரியாது. அதை ஒருவித சரித்திர சான்றும் இல்லாமல் தைமுதலாம் திகதியுடன் இணைப்பது தைப்பொங்கலின் விஞ்ஞான விளக்கத்தை அறியாதவர்கள் செய்யும் செயல்.

திருவள்ளுவர் பிறந்த னத்தை சித்திரை முதலாம் திகதியுடன் இணைத்து வள்ளுவர் ஆண்டை சித்திரை முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கலாமே! சித்திரை முதலாம் திகதி நாள் தமிழர்களின் வருடப்பிறப்பு என்பதற்குரிய விஞ்ஞான விளக்கத்தை இன்னொரு கட்டுரையில் பார்ப்போம். எமக்கு தெரியாத திருவள்ளுவரின் பிறந்த தினத்தை சித்திரை முதலாம் திகதியுடன் இணைத்து வருடப்பிறப்பை சித்திரை முதலில் இருந்து கொண்டாடுவதை விடுத்து அதை எந்த ஒரு சரித்திர சான்றும் இல்லாமல் தைமுதலாம் திகதியுடன் இணைத்து வருடப்பிறப்பு தினத்தை மாற்றமுயல்வது எமது முன்னோர்கள் விஞ்ஞான பூர்வமாக அறிந்து கொண்டாடிய நிகழ்வை சரித்திர சான்று அற்ற ஒரு நிகழ்வாக மாற்றும் ஒரு முயற்சியாகும். இதை பிற்காலத்தில் வரும் எமது விஞ்ஞானம் நன்கு தெரிந்த சந்ததிகள் அறிந்தால் அவர்கள் எம்மை எள்ளி நகையாடுவர். சிலர் தவறாக தைப்பொங்கல் தமிழருடையது ஆனால் சித்திரை வருடப்பிறப்பு இந்துக்களுடைய என்கிறார்கள். இவ்விரண்டு நிகழ்வுகளும் இயற்கையில் நடைபெறும் நிகழ்வுகள் விஞ்ஞான பூர்வமாக விளக்கக்கூடியவை. இரண்டு நிகழ்வுகளையும் தமிழர்கள், இந்துக்கள் உட்பட பல்வேறுபட்ட சமயத்தவர்களும், பல்வேறுபட்ட மொழிபேசுபவர்களும், பல்வேறு ஆசிய நாட்டவர்களும் கொண்டாடுகிறார்கள். தைப்பொங்கல் மட்டும்தான் தமிழருடையது. சித்திரை புதுவருடம் தமிழருடையது அல்ல என்பது விஞ்ஞான அறிவு அற்றவர்களது கூற்று என்பதில் எண்ணவும் ஐயமில்லை.

*எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்*
*அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.*


**சிவ ஞானநாயகன்**
vlambaram@sympatico.ca




# அம்பைக்கு இயல் விருது

2008ம் ஆண்டுக்கான இயல் விருது தற்காலத் தமிழ் இலக்கியத்தின் முதல் பெண்ணிய எழுத்தாளர் என்று அறியப்படும் அம்பைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. கனடாவில் இயங்கும் தமிழ் இலக்கியத் தோட்டம் அளிக்கும் இந்த வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனை விருது, கேடயமும் 1500 டொலர்கள் மதிப்பும் கொண்டது. சுந்தர ராமசாமி, கே.கணேஷ், வெங்கட் சாமிநாதன், பத்மநாப ஐயர், ஜோர்ஜ் எல் ஹார்ட், தாசீசியஸ், லகஷ்மி ஹோம்ஸ்ரோம் போன்றவர்களைத் தொடர்ந்து இவ்விருதுக்கு உரியவராக தேர்வு செய்யப்பட்டிருக்கும் அம்பை, அவருக்கு முன்னும் பின்னுமான பெண்ணிய எழுத்தாளர்களில் தனித்து நிற்பவர். நாற்பது வருடங்களுக்கு மேலாக தன் செயல்பாட்டை எழுத்துக்கும், சிறுகதைகளுக்கும் மட்டுமென் றில்லாமல் இலக்கியத்துக்கு அப்பால் பெண்கள் வாழ்க்கையை வேறு வடிவங்களுக்கும் இட்டுச் சென்றதில் வெற்றி கண்டவர்.

மரபார்ந்த பெண்ணுக்கு கொடுக்கப்படும் மதிப்புகளை அவர் மறுத்தாலும், தன் சுதந்திரத்தை தானே தேடிக்கொள்ளும் பெண்ணின் உரிமைக்காக பேசினாலும், அவர் பெண்மையை மறுத்த பெண்ணியவாதி அல்லர். கர்நாடக சங்கீதமும் பரதநாட்டியமும் தெரிந்தவர். அவருடைய எழுத்து தனித்துவம் வாய்ந்தது. அது வெளிப்படுத்தும் பெண்ணியம் அவருக்கு முந்திய மரபின் அடியொற்றி எழுதிய பெண் எழுத்தாளர்களிடமிருந்து வேறுபட்டது. கலையாக வெளிப்பாடு பெற்றுள்ள முதல் பெண்ணியக் குரல் என்று அம்பையினுடையதைச் சொல்லலாம்.

அம்பையின் நூல்கள்: அந்தி மாலை (நாவல்), சிறகுகள் முறியும் (1976), வீட்டின் மூலையில் ஒரு சமையலறை (1988), காட்டில் ஒரு மான் (2000), வற்றும் ஏரியின் மீன்கள் (2007), ஆங்கில மொழிபெயர்ப்பில் A Purple Sea (1992), In a Forest, a Deer (2006) ஆகியவையாகும். இவை தவிர தமிழிலக்கியத்தில் பெண்கள் என்ற Face Behind the Mask (1984) ஆங்கில ஆராய்ச்சி நூல். “பயணப்படாத பாதைகள்” - ஓவியம், நாடகம், பாரம்பரிய நடனத் துறைகளில் ஈடுபட்ட பெண்களின் வாய்மொழி வரலாற்றுப் பதிவு. “சொல்லாத கதைகள்” - சுதந்திரப் போராட்டத்தில் பங்குபற்றிய பெண்கள், தலித் எழுத்தாளர்கள் ஆகியவர்களின் வாய்மொழி வரலாற்றுப் பதிவு.



SPARROW (Sound and Picture Archives for Research on Women) என்ற அமைப்பை நிறுவி அம்பை அதன் இயக்குநராக செயல்பட்டு வருகிறார். Dr. C.S.Lakshmi என்ற தன்னுடைய இயற்பெயரில் The Hindu, The Economics and Political Weekly, The Times of India போன்ற பத்திரிகைகளுக்கு அம்பை அவ்வப்போது எழுதி வருகிறார்.

விருது வழங்கும் விழா ரொறொன்ரோ பல்கலைக் கழக அரங்கில் வழக்கம்போல வரும் மே மாதம் நடைபெறவிருக்கிறது.


**APPLEMORE AUTOMOTIVE**


உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# சனிக்கிழமை இரவின் பதட்டம்



சத்குரு ஜக்கி வாசுதேவ்

***சமூகத்தில் இன்று எல்லோருமே ஏதோ ஒரு அளவிலான பதட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பது சாதாரணமான விஷயமாகிவிட்டது. இதற்கு காரணம் உங்கள் சக்தி எரிக்கப்படாமல் சிக்கிப்போயிருக்கிறது என்பதுதான்.***

கடந்த காலத்தில் இல்லாத அளவு இன்று இந்த உலகம் முழுவதுமே ஒரு புதுவிதமான பதட்டத்திற்கு ஆளாகி இருக்கிறது. இதற்குக் காரணம் இன்றைய நவீன மனிதன் தன் உடலை பயன்படுத்துவதைப் பெருமளவு நிறுத்தியிருக்கி றான். பழைய காலங்களில் உடல் சார்ந்த உழைப்பு அதிகம் இருந்தபோது உங்கள் பதட்டமும் படபடப்பும் கரைக்கப்பட்டிருக்கின்றன. உங்கள் நரம்பியல் சார்ந்த சக்தி செலவு செய்யப்பட்டிருக்கிறது. இன்று பலரும் குறிப்பாக இளஞர்கள் பலரும் உளவியல் சிக்கல்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள். அவர்களெல்லாம் நீச்சலிலோ, விளையாட்டிலோ, தினசரி விளையாட்டுகளிலோ ஈடுபடத் தொடங்கிய பிறகு எல்லாம் சரியாகிவிட்டது. ஏனென்றால் போதிய அளவு உடல் உழைப்பு நடக்கும் போது சக்தி எரிக்கப்பட்டிருக்கிறது.

தொடர்புகளுக்கு: 416.300.3010
website: www.ishafoundation.org
www.ishayoga.org

மனிதனுக்கு இதற்கு முன் இல்லாத அளவுக்கு உடல் சார்ந்த செயலின்மை வந்திருக்கிறது. பழைய காலங்களில் உடல் உழைப்பு இல்லாமல் மனிதனால் இருக்கவே முடியாது. ஏனென்றால் பிழைப்புக்காகவாவது அவன் உழைத்துத்தீர வேண்டியிருந்தது. ஆனால் இன்று முன்பை விட அதிக பதட்டமும், மனத் தளர்ச்சியும் மனிதனுக்கு வந்திருக்கிறது. அன்றும் இத்தகைய மனிதர்கள் இருந்தார்கள், ஆனால் இவ்வளவு பேர் இல்லை. இன்று எல்லோருமே ஒருவிதமான பதட்டத்தில் இருக்கிறார்கள். காரணம், அவர்கள் சக்திநிலை எரிக்கப்படாமல் சிக்கிப்போயிருக்கிறது. இந்த பைத்தியக்காரத்தனத்தை நீங்கள் கடந்தும் போகவில்லை, அதனை கரைக்கவும் முயலவில்லை. அதற்கான சிகிச்சையும் இல்லை. நீங்கள் வெளியே போய் விறகு வெட்டுகிற வேலையில் ஈடுபட்டீர்களென்றால் பெருமளவு சக்தி எரிக்கப்பட்டு வாழ்க்கை அமைதியாகிவிடுகிறது. ஆனால் இன்று அப்படி இல்லை. உடலைப் பயன்படுத்தாத காரணத்தினாலே பல புதுவிதமான நோய்கள் இதற்கு முன் இல்லாத அளவு உருவாக்கிக்கொண்டு இருக்கிறீர்கள். ஒருகாலத்திற்குப் பிறகு உங்கள் அமைப்பிலேயே அது சில சிக்கல்களை ஏற்படுத்தகிறது. உங்கள் உடல் மற்றும் உணவு சார்ந்த சக்திகளுக்கு வெளிப்பாடு தேவைப்படுகிறது. இப்படித்தான் உங்கள் பொழுதுபோக்கு சங்கங்கள், டிஸ்கோ நடன மையங்கள் எல்லாம் தோன்றின. எப்படியாவது இந்த சக்தியை செலவிட்டாக வேண்டும். டிஸ்கோ நிலையங்களுக்குப் போனால் உள்ளே பெருகி வழிகிற கூட்டத்தில் மூச்சுத்திணறலே ஏற்படும். புகையும் வியர்வையுமாக நிரம்பி வழிகிற சூழலால் மனிதர்கள் வெறித்தனமாக ஆடுகிறார்கள். அங்கே ஆடக்கூட முடியாது, ஒருவர் மேல் ஒருவர் விழுந்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் அது தேவைப்படுகிறது. இல்லையென்றால் பைத்தியம் பிடிக்கும் போல இருக்கிறது. சனிக்கிழமை இரவுகளில் அந்த பதட்டத்தை எரிப்பதற்கு, கரைப்பதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன. மறுபடியும் அந்த பதட்டம் சேமிக்கப்படுகிறது. சனிக்கிழமை இரவு அந்த பதட்டம் கரைக்கப்படுகிறது.

இந்தப் பைத்தியக்காரத்தனத்தை முற்றிலும் நீக்கிவிட்டு, அதைக் கடந்து போக ஒரு வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் அந்த அம்சத்தின் ஒரு அங்கமாகவே இல்லாத அளவுக்கு அதைக் கடந்து போக முடியும். அதற்குத்தான் தியானம் என்று பெயர். இந்த நிலையில் நீங்கள் நடனமாடுகின்றீர்கள் என்றால், நடனத்தின் ஆனந்தத்துக்காக ஆடுகிறீர்களே தவிர ஏதோவொன்ற எரிக்க வேண்டும் என்பதற்காக அல்ல. உங்கள் சக்தியை எரிக்க வேண்டுமென்று நடனமாடத் தொடங்கினால் அது ஒரு சிகிச்சையாகத்தான் இருக்கும். அது ஒரு நல்ல சிகிச்சைதான். ஆனால் அதிலும் ஓர் அவலமான அம்சம் உண்டு. நீங்கள் பேராசையின் அடிப்படையில் ஆடுகிறீர்களே தவிர அன்பின் அடிப்படையில் அல்ல.

அன்புக்கும் பேராசைக்குமான வேறுபாடு உங்களுக்குத் தெரியுமா? பேராசை என்பது ஆழமானதொரு தேவை. அன்பு என்பது தேவையல்ல. நீங்கள் அன்புமயமாகிறபோது அமைதியாகிறீர்கள். வேறெதுவும் தேவைப்படுவ தில்லை. ஆடாமல் அசையாமல் உங்களால் வாழ்க்கை முழுக்க அமர்ந்திருக்க முடியும். ஆனால் பேராசையோடு உங்களால் அமர்ந்திருக்க முடியாது. ஏதாவது செயல் செய்யவேண்டும், இல்லையென்றால் பைத்தியம் பிடிக்கும். ஒருவிதமான பதட்டம், பைத்தியக்காரத்தனம் உங்களுக்குள் இருக்கிறபோது நீங்கள் பேராசைப்பட்டவர்களாகத்தான் இருக்க முடியும். பேராசை என்பது காமம் சார்ந்திருக்கலாம், உணவு சார்ந்திருக்கலாம், அல்லது ஒரு செயலையோ, பொழுதுபோக்கையோ சார்ந்திருக்கலாம். ஆனால் உங்களுக்குள் ஒரு பேராசை ஏற்படும். உங்கள் வேலை கூட அந்தப் பேராசையைத் தணித்துக் கொள்வதற்கான வாய்ப்பாகத்தான் உங்களுக்கு அமையும். இது உலகம் முழுக்க ஏற்கப்பட்ட ஒரு விஷயமாகி விட்டது. இந்த மனிதர்கள் தொடர்ந்து வேலை செய்து கொண்டே இருக்கிறார்கள். அற்புதமான ஒன்றை நிகழ்த்த வேண்டுமென்பதற்காக அல்ல, ஏதாவது ஒன்றில் ஈடுபடாவிட்டால் தங்களை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்றே அவர்களுக்குத் தெரிவதில்லை.

இந்த பைத்தியக்காரத்தனத்திலிருந்து நீங்கள் எச்சரிக்கையோடு விடுபட வேண்டும். உங்களுக்குள் இது இருக்கிறது என்று யாருக்கும் தெரியாது. நீங்களோ அதை மறக்க விரும்புகிறீர்கள். அதை மறப்பதற்கு என்னென்ன வேண்டுமோ அதையெல்லாம் செய்கிறீர்கள். உங்கள் பைத்தியக்காரத்தனத்தை மறைப்பதற்குத் தான் உலகத்தின் அத்தனை பொழு போக்குகளும் உருவாயின. பொழுபோக்கை உங்கள் வாழ்க்கையிலிருந்து எடுத்துவிட்டால் நீங்கள் பைத்தியமாகிவிடுவீர்கள். ஒரு மனிதர் முழுக்க முழுக்க சமநிலையிலிருக்கிறபோது அவருக்கு பொழுதுபோக்கு தேவையில்லை. வெறுமனே அமர்ந்து மூங்கில் வளர்வதை அவரால் கவனிக்க முடியும். அவருக்கு எந்த பொழுதுபோக்கும் அவசியமில்லை.

## அரச பயங்கரவாதம்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

"தமிழர்கள் தாம் கையெழுத்திடுவதுடன் மட்டும் நின்றுவிடாமல், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், வேலைத் தளங்களில் உள்ள, தமிழர்களது அல்லாத தமது நண்பர்களுக்கும் தமிழர் நிலைமையை எடுத்து விளக்கி, அவர்களையும் இதில் கையெழுத்திட வைக்க வேண்டும்" எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்

"காலத்தின் மிக அவசரமான தேவை கருதி எல்லோரும் இதனை உடனடியாகச் செய்ய வேண்டும்" என்று அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

அந்தக் கடிதத்தின் தமிழாக்கம் கீழே தரப்பட்டுள்ளது. இதில் கையெழுத்திட விரும்புவோர் கீழே உள்ள இணைப்பு (link) ஊடாக கையெழுத்திடும் பக்கத்திற்குச் சென்று கையெழுத்திடுமாறும் "ஒபாமாவுக்கான தமிழர்கள்" கேட்டுக்கொள்கின்றனர்.

கையெழுத்திடும் இணைப்பு:
http://www.tamilsforobama.com/sign/usersign.html .
கடிதத்தின் தமிழாக்கம்:
மாண்புமிகு அமெரிக்க அரச தலைவர் பராக் ஒபாமா அவர்களுக்கும் மற்றும் மரியாதைக்குரிய அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் ஹில்லாறி கிளிண்டன் அவர்களுக்கும் !

இக்கடிதத்தில் கையொப்பம் இட்டிருக்கும் நாங்கள், இலங்கையில் நடக்கும் போரை முடிவுக்கு கொண்டுவர உடனடியாக தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பணிவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.
ஏனெனில் -
1. இந்தப் போரானது தமிழர்களின் பூர்வீக நிலமான இலங்கையின் வட-கிழக்கு பகுதி மீது சிறிலங்கா அரசால் மேற்கொள்ளப்படுகின்றது. பெரும் அழிப்வை ஏற்படுத்தி, தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தில் இருந்து அவர்களை அகற்றி இனச்சுத்திகரிப்பச் செய்வதே இந்தப் போரின் நோக்கமாகும். முதலாம் நூற்றாண்டு காலத்தில், ரோமன் இராச்சியத்தில் பலஸ்தீனத்திலிருந்து யூதர்களைத் துரத்தியது போன்ற பெரும் மக்கள் இடப் பெயர்வு அங்கு இப்போது நிகழ்கின்றது.

2. ஆங்கிலேயரிடம் இருந்து இலங்கை சுதந்திரமடைந்த 1948 இலேயே இந்த தமிழின அழிப்பு ஆரம்பித்து விட்டது. தமிழர் நிலங்களைப் பறித்து, அவற்றுக்கு சிங்களப் பெயர்களைச் சூட்டி, அவற்றில் சிங்களக் குற்றவாளிகளைக் குடியேற்றி, அவற்றில் இராணுவ முகாம்களை நிறுவுதல் என இந்த இனச் சுத்திகரிப்பு ஆரம்பித்தது. தொடர்ந்து, தமிழர்களுக்கு கல்வி மறுக்கப்பட்டு, வேலை வாய்ப்பு மறுக்கப்பட்டு தமிழர்களது பொருளாதார வாழ்வு சீரழிக்கப்பட்டது. மேலும், கடந்த 25 வருட காலமாக தமிழர் படுகொலைகளும், கைதுகளும், காணாமல் போதலும், மட்டுமன்றி தமிழர் வாழ்விடங்கள் மீது வான், தரை, மற்றும் கடல் வழியான தொடர்ச்சியான குண்டு வீச்சுக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

3. சிறிலங்கா அரசாங்கமானது புத்த மதத்தை நாட்டின் அரச மதமாக்கி, இந்து மற்றும் கிறிஸ்தவ ஆலயங்களை குண்டு வீசி அழித்து விட்டு, பின்னர் அந்த இடங்களில் புத்த விகாரைகளைக் கட்டுகின்றது.

4. அனைத்து சமாதான முயற்சிகளையும் நிராகரித்து, சமரச உடன்பாடுகளையும் கிழித்தெறிந்த சிறிலங்கா அரசாங்கங்கள், இப்படியான முயற்சிகளுக்கு தொடர்ந்து முட்டுக்கட்டைகளையும் போடுகின்றன.

5. தமிழ் மக்களுக்கு அனைத்துலக தொண்டு நிறுவனங்கள் வழங்கி வந்த அனைத்து உதவிகளையும் நிறுத்தியதோடு, சிறிலங்கா அரசாங்கமானது, அந்த நிறுவனங்களை நாட்டை விட்டும் துரத்தியது. சில சந்தர்ப்பங்களில், அவர்களைக் கொலைகளும் செய்துள்ளது.

இந்த இனப்படுகொலைப் போரை நிறுத்துவதற்கு, புதிய ஒபாமா அரசாங்கம் உடனடியாக காத்திரமான நடவடிக்கையை எடுக்குமென்றும், தமிழர்களுக்கு நல்ல வழி ஏற்படுத்தும் என்றும் நாங்கள் நம்புகின்றோம்.

எங்களது இந்த விண்ணப்பத்திற்கு மதிப்பளித்தமைக்கு எமது நன்றிகளும் உங்களுக்கு உரித்தாகட்டும்.

கடன்... பணம்

கடன் பிரச்சினையில் மூழ்கித் தவிக்கிறீர்களா?
நிதிப் பிரச்சினைக்கு தீர்வு காண நாடுங்கள்

- Bankruptcy - செய்து கொடுத்தலும் இலவச ஆலோசனையும்
- Debt Consolidation
- Line Of Credit
- Personal Loan
- Business Loan
- Indian Visa Arrangement
- Students Loan Amount Reduced
- Credit Rehabilitation [ Answer within 24 hours ]
- Mortgage Problems & Refinancing
- Any Immigration Problems with Free Advice
- Are you under Deportation? Call Us
- Are You New To Canada - Call Us
- Have You Problem With Your Car Loan Payment
- Have You Been Laid Off Unfairly?
- Any Kind Of Legal Services
- Mortgage - கட்டமுடியாமல் உங்கள் வீட்டை Bank எடுக்கின்ற நிலைமையா?
- வாகன விபத்துக்கு உள்ளானீர்களா? காயமடைந்து விட்டீர்களா? உங்களுக்கு பெரிய நிதியை காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்று தருவோம்.
- உங்களின் உரிமைகளை எங்களின் மூலம் வெல்லுங்கள்.



Credit Score குறைவு என்ற கவலை வேண்டாம்.

We help our community


முற்றிலும் இலவச ஆலோசனைகளுக்கும் சேவைகளுக்கும்
அழையுங்கள் சுரேஸ்: 416-662-9860

# பேரண்டக் கதை

வென் தீவில் இருந்து 1599 இல் பிரகு (Prague ) என்ற இடத்தில் தனது ஆய்வு நிலையத்தை அமைத்த ரைக்கோ, 1601 இல் மரணமடைந்தார். ரைக்கோவின் மரணம் கூடச் சர்ச்சையானதாகத் தான் உள்ளது. சிறுநீரகக் கோளாறினால் அவதியுற்ற ரைக்கோ, பத்து நாட்களாகப் பெரும் வேதனைக்கு உட்பட்டு, இறுதியில் மரணத்தைத் தழுவினார். சிறுநீரகக் கோளாறே அவரது மரணத்திற்கான காரணம் எனக் கூறப்பட்டது. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ரைக்கோவின் கல்லறையானது திறந்து பார்க்கப்பட்டு, அவரது தலைமயிரானது பகுப்பாய்வுக்கு உள்ளாக்கப்பட்டது. ஏராளமான பாதரசம் அவரது தலைமயிரில் செறிந்திருந்ததை பகுப்பாய்வாளர்கள் கண்டுகொண்டார்கள். எனவே ரைக்கோ இறந்தது சிறுநீரகக் கோளாறினால் அல்ல, மேக்கூரி என்ற பாதரசம் கொடுக்கப்பட்டே ரைக்கோ கொல்லப்பட்டிருக்க வேண்டும் என இப்போது எண்ணுகின்றார்கள். சிறுநீரகக் கோளாறின் வேதனையைக் குறைப்பதற்காகக் கொடுக்கப்பட்ட மருந்தில் பாதரசத்தின் அளவு கூடுதலாக இருந்திருக்கும் எனச் சிலர் கூறுகின்றார்கள். ஆனால் வேறு சிலரோ, ரைக்கோவின் இடத்திற்கு தான் வரவேண்டும் என ஆசைப்பட்டு, ஒருவேளை அவரது உதவியாளராக இருந்த கெப்பிளர் இதனைச் செய்திருக்கலாம் எனக் கூறுகின்றார்கள். எது எப்படியிருப்பினும், ரைக்கோ பிராகி என்ற அற்புதமான வானவியலாளர் இறந்தது, உடம்பில் மேக்கூரி என்ற பாதரசத்தின் அளவு கூடியதாலேயே அன்றி சிறுநீரகக் கோளாறினால் அல்ல என்பது அவர் இறந்து கிட்டத்தட்ட நான்கு நூற்றாண்டுகளின் பின்னர் தான் கண்டறியப்பட்டது.

இனி ரைக்கோவின் காலத்திலேயே வாழ்ந்த வேறு இரு பெரும் வானவியலாளர்களைப் பற்றிப் பார்ப்போம். ஒருவர் கெப்பிளர், மற்றவர் கலிலியோ. முதலில் கெப்பிளரைப் பற்றிப் பார்த்து பின்னராக கலிலியோவிடம் வருவோம்.

யோகான்ஸ் கெப்பிளர் - Johannes Kepler கொப்ப நிக்கசின் காலத்தின் பின்னராக, அவர்விட்ட இடத்தில் இருந்து தொடக்கூடியதாக மூன்று வானவியலாளர்களை ஐரோப்பா தந்தது. ரைக்கோ பிராகி, யோகான்ஸ் கெப்பிளர், கலிலியோ கலிலி என்ற அந்த மூவரும் ஏறக்குறைய ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள். கொப்பநிக்கசிற்குப் பெருமையைச் சேர்த்தவர்கள் இந்த மூவரும் (பிராகியிடம் சிறிது விலகல் இருந்தாலும்) தான் என்றால் அது தவறில்லை எனலாம். இம் மூவருள்ளும் கலிலியோவே பலராலும் அறிந்து கொள்ளப்பட்ட விஞ்ஞானியாக இருந்தாலும், என்னளவில் கெப்பினரே நவீன வானவியலுக்கான பெரும் பங்களிப்பை ஆற்றியவர் என்பேன். வானவியலின் பல புதிர்களுக்கான விளக்கங்களைத் தந்தவர் கெப்பினர். வானவியலின் தேடல்களுக்கான புதுவழிகளைக் கொடுத்தவரும் இவர்தான் எனக்



## பிரபஞ்சம் - 32

கூறவேண்டும். இவரது காலத்தில் வானவியலும், சோதிடமும் வேறு பிரித்து அறிய முடியாதது போல ஒன்றாகவே இணைந்திருந்தன. அப்படியிருக்கையில் வானவியலின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக கணிதத்தினையும், பௌதீகத்தையும் பெருமளவில் உதவிக்காகப் பயன்படுத்தி வெற்றியும் பெற்றவர்தான் கெப்பினர். இவ்வளவு பீடிகைகளுடன் தான் கெப்பினர் பற்றி பேரண்டக்கதைக்காகப் பார்க்கப்போகின்றோம்.

1571ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் திகதியில் பிறந்த கெப்பினர் 1630 ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் திகதிவரை இப்புவியில் வாழ்ந்தவர். ஜேர்மனியில் பிறந்த கெப்பினர், தனது ஐந்தாவது வயதில் தந்தையாரைத் தொலைத்து விட்டார். ஆம், நெதர்லாந்துடனான சண்டைக்குச் சென்ற கெப்பினரின் தகப்பனார் மீண்டும் திரும்பி வரவில்லை. அவருக்கு என்ன நடந்தது என்பது இன்றுவரை எவருக்குமே சரியாகத் தெரியாது. கெப்பினரும் தாயின் வயிற்றிலே இருந்து முதிர்ச்சியடையாமல் பிறந்த குழந்தை. மிகவும் நோஞ்சானாக, அதேசமயம் இலகுவில் நோயினால் பீடிக்கப்படக் கூடிய குழந்தையாக, சிறுவனாக இருந்த போதிலும் படிப்பிலே படு சுட்டி. அதிலும் கணிதத்தில் மகாகெட்டிக்காரன். கெப்பினரின் புத்திக் கூர்மையைக் கண்ட, கெப்பினரின் பாட்டனாரின் வாடிக்கையாளர்கள் கெப்பினரின் படிப்புக்கு உதவி செய்ய, கெப்பினரும் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து முதுமாணி (M.A) பட்டம் பெற்றார். கிரேக்கம், எபிரேயம், இலத்தின் போன்ற பன்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவராக இருந்தது, இவரின் அறிவியல் தேடல்களுக்கு மிகவும் உதவியாக இருந்ததுடன், இவரது கருத்துக்களை, கண்டுபிடிப்புக்களை ஐரோப்பாவின் பல இன மக்களுக்கும் அறிவிக்கக் கூடியதாகவும் இருந்தது.

இவரது காலத்தில் மாட்டின் லூதரின் புரட்டஸ்தாந்து மதம், கத்தோலிக்க மதத்திற்கு எதிராக வளர்ச்சியடைந்து கொண்டு இருந்தது. கெப்பினர் வசித்த பகுதியில் இருந்த மக்கள் புரட்டஸ்தாந்து மதத்தினை அதிகம் தழுவிக் கொள்ள, கெப்பினரின் குடும்பமும் புரட்டஸ்தாந்து மதத்தினைத் தழுவ, கெப்பினரும் புரட்டஸ்தாந்து மதத்தவராயினர். புரட்டஸ்தாந்து மதத்தில் ஈடுபாடுடையவராக இருந்தாலும், புரட்டஸ்தாந்து மதத்தில் வலிமையான உறுப்பினர் ஆகச் சேர மறுத்து விட்டார். பின்னாளில் பிரகுவில் ரைக்கோவுடனும், தனியனாகவும் ஆய்வு மையத்தில் வேலை செய்யும் போது கத்தோலிக்க மதத்தில் சேரும்படி வற்புறுத்தப்பட்ட போது அதனையும் மறுத்து விட்டார். இதனால் மதங்களைப் பொறுத்தவரையில் ஒருவித அன்னியத் தன்மையுடன், அன்னியனாகவே கெப்பினர் காணப்பட்டார். இதுவும் கெப்பினருக்கு வசதியாகவே இருந்தது. ஏனெனில் தமது கருத்துக்களை எந்தவொரு மத இடைஞ்சல்களும் இன்றிச் சுயாதீனமாக, இயல்பாக அவரால் கூறக்கூடியதாக இருந்தது. அவரைத் தண்டிப்பதற்கோ அல்லது கட்டுப்படுத்துவதற்கோ எந்த ஒரு மதமும் இல்லை. இதனால் தான் வானியல் பற்றிய மிக நுணுக்கமான விடயங்களை, அற்புதமாகவும், தெளிவாகவும் இவரால் பல புத்தகங்களில் வெளியிடக் கூடியதாக இருந்தது. இப்புத்தகங்களே உண்மையில் வானின் கதையை மாற்றிக் காட்டியது என்பது எனது கருத்து.

கெப்பினர் தமது காலத்தில் புகழ் பூத்த சோதிடராகவும் இருந்திருந்தார். வான் பொருட்களின் நிலைகளைக் கொண்டு எதிர்காலத்தைக் குறிப்பிடுவதில் வல்லவராக காணப்பட்ட கெப்பினருக்கு இது சிறுவயதில் இருந்தே கைவந்த கலையாக இருந்தது. சிறுவனாக இருக்கையிலேயே தனது சகமாணவர்களுக்கு நமது மொழியில் சொல்வதானால் 'குறிப்பு' ச் சொல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பொதுவாகவே இவரது சோதிட எதிர்வு கூறல்கள் கோள்களின் நிலைகளை அடிப்படையாகக் கொண்டவையல்ல. தனது பொது அறிவின் அடிப்படையிலேயே தனது சோதிட அறிவை வளர்த்துக் கொண்டவர் எனக் கூறுகின்றார்கள். அதனால் தான் சோதிடம் இவரது கைவந்த கலை எனக் கூறினேன்.

பல்கலைக்கழகத்தை விட்டு வெளியே வந்த கெப்பினர், கோள்களின் நிலைகளை வைத்து எதிர்கால காலநிலையைப் பற்றிக் கூற, அது அவரின் நல்வாய்ப்பாக அப்படியே நடந்து விட்டது. அந்த நிகழ்வானது கெப்பினரை பிரபல்யப்படுத்திவிட ரைக்கோவுக்கு உதவியாளராக அவரை ஆக்கிவிட்டது. பிந்நாளின் பிரசித்தி பெற்ற RUDOLF TABLE என்ற ரூடோல் பின் அட்டவணையைப் பூர்த்தி செய்தார். ரைக்கோவும், கெப்பினரும் செய்த கணிப்பின் விளைவாக, இறுதியில் கெப்பினரினால் பூர்த்தியாக்கப்பட்ட இந்த அட்டவணையானது, எதிர்காலத்தில் கோள்களின் நிலையைச் சரிவரக் குறிப்பதனால், எதிர்காலத்தினைப் பற்றிய கணிப்பினைச் சரிவரக் கணிக்கமுடியும். எதிர்காலத்தின் பிறப்புகள் பற்றியும், அவற்றின் நடத்தைகள் பற்றியும் சரியாகக் கூறமுடியும் என்பதும் அக்காலத்தின் கருத்தாக இருந்தது.

இதுவரையில் கெப்பினர் பற்றி பொதுப்படையாகக் கூறினேன். அடுத்தமுறை கெப்பினரின் வானியல் பங்களிப்புப் பற்றிப் பார்ப்போம்.



**- கனி -**


ரிப்ளக்ஸ்
REFLEX
COPY & DIGITAL PRINTING
B/W & Color Copies
Color & B/W Prints - Booklets - Binding
Scanning - Color B.Card & Flyers
POSTERS & BANNERS
1109 Bay St., Toronto - Tel: 416-975-9674
அச்சுத் தொடர்பிற்கு JOE (416)558-8905
BAY & BLOOR (BAY SUBWAYக்கு அருகாமையில்)
OPEN 7 DAYS



New Home Warranty Inspections
Pre-purchase Home Inspections
Nalliah Thayabharan BSSO CMI CEI RHI
Building Science Specialist of Ontario®
Certified Master Inspector®
Registered Home Inspector®
Building Experts Canada Ltd
416 332 1743 / www.buildingexperts.ca



Commercial Building Inspections
Environmental Assessments Phase I, II & III
Specializing in Commercial Malls, Motels & Gas Stations
Building Experts Canada Ltd
Tel.416 332 1743 / Fax 416 754 7032
www.buildingexperts.ca

# " HALL OF FAME" கிரிக்கெட் செய்திகள்

## விளையாட்டுத் தகவல்கள் 253

**கபில், கவாஸ்கருக்கு கவுரவம்**

சிட்னி - ஐ.சி.சி யின் 'ஹால் ஆப் பேம்' பட்டியலில் இந்தியாவின் கபில்தேவ், கவாஸ்கர், பிஷன் சிங் இடம் பெற்றுள்ளனர். ஒவ்வொரு துறையிலும் சிறப்பாக செயல்பட்டவர்களை கவுரவிக்கும் வகையில் அவர்களின் உருவச்சிலை, நினைவு பொருட்கள் போன்றவற்றை கொண்டு அமைக்கப்படும் மியூசியத்துக்கும் 'ஹால் ஆப் பேம்' என்று பெயர். சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி) நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தை சிறப்பிக்கும் விதமாக கிரிக்கெட் 'ஹால் ஆப் பேம்' அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. நேற்று சிட்னியில் நடந்த துவக்க விழாவில் 'ஹால் ஆப் பேமில்' இடம்பெறும் 55 வீரர்களின் பட்டியலை ஐ.சி.சி வெளியிட்டுள்ளது. இதில் இந்தியாவில் கபில் தேவ், கவாஸ்கர் மற்றும் பிஷன்சிங் பேடி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்களை தவிர்த்து 'கிரிக்கெட் பிதாமகன்' அவுஸ்திரேலியாவின் பிராட்மேன், ஆலன் பார்டர், கிரேக் சாப்பல், இயான் சாப்பல், ரெனிஸ் லில்லி, இங்கிலாந்தின் டபிள்யு ஜி.கிரேஸ், இயான் போத்தம், கிரகாம் கூச், ஜிம் லேகர், வெஸ்ட் இண்டீசின் விவியன் ரிச்சர்ட், சோபர்ஸ், லாயட், மால்கம் மார்ஷல், கிரீனிட்ஜ், பாகிஸ்தானின் இம்ரான் கான், மியாண்தத், நியூசிலாந்தின் ரிச்சர்டு ஹாட்லீ ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். ஆண்டுதோறும் ஐ.சி.சி விருது வழங்கும் விழாவின் போது இப்பட்டியலில் கூடுதலாக ஒருவர் சேர்க்கப்படுவார் எனவும் அறிவித்துள்ளது.

இது குறித்து ஐ.சி.சி தலைவர் ஹருன் லார்கத் அளித்த பேட்டியில், 'நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கிரிக்கெட்டின் பாரம்பரியத்தை அனைவரும் அறிவதற்காக ஐ.சி.சி, 'ஹால் ஆப் பேம் நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் கிரக்கெட்டின் வளர்ச்சிக்கு உதவியர்கள் கவுரவிக்கப்படுவார்கள்', என்றார்.

'ஹால் ஆப் பேம்' பட்டியலில் இடம்பிடித்து குறித்து கவாஸ்கர் கூறுகையில், 'நூற்றாண்டு விழாவின் போது அறிவிக்கப்பட்ட 'ஹால் ஆப் பேம்' பட்டியலில் இடம்பிடித்து மகிழ்ச்சி அளிக்கிறது. பிராட்மேன், சோபர்ஸ் போன்றவர்களுடன் இடம்பெற்றது பெருமைக்குரியது', என்றார்.

**ரஞ்சி கோப்பை - வீழ்ந்து எழுந்த மும்பை - ரோகத் அசத்தல் சதம்**

ஐதராபாத் - ரஞ்சிக்கோப்பை இறுதியில் துவக்கத்தில் சரிவை சந்தித்த மும்பை அணி, ரோகித் சர்மாவின் சதத்தால் மீண்டது. பந்துவீச்சில் கலக்கிய உத்தர பிரதேச அணியின் புவனேஷ்வர் ஐந்து விக்கெட் கைப்பற்றினார்.

இந்தியாவின் உள்ளூர் தொடரான ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடர் இறுதியில் ஐதராபாத்தில் நேற்று துவங்கியது. மும்பை, உத்தர பிரதேச அணிகளுக்கு இடையிலான இந்த போட்டியில் Toss வென்ற உ.பி பீல்டிங் செய்ய தீர்மானித்தது.

**சச்சின் அதிர்ச்சி** - மும்பை அணிக்கு அணித்தலைவர் வாசிம் ஜாபர் மற்றும் ரகானே துவக்க வீரர்களாக களமிறங்கினர். அரையிறுதியில் 'டிரிபிள்' சதம் கடந்த ஜாபர் இம்முறை ஒரு ஓட்டத்துடன் திருப்திபட்டு வெளியேறினார். அடுத்து வந்த ராகனே, சமன்ட் உடன் சேர்ந்தார். சமன்ட் 26 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதிக எதிர்பார்ப்புடன் வந்த சச்சின் ரன் எதுவும் எடுக்காமல பெவிலியன் திரும்பினார்.

ரோகித் சதம் - தொடர்ந்து அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்த மும்பை அணி, 4 விக்கெட் இழப்பிற்கு 55 ஓட்டங்கள் எடுத்து தள்ளாடியது. இந்த நேரத்தில் களமிறங்கிய ரோகித் சர்மாவும், அபிஷேக்கும் சேர்ந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருவரும் ஒருவர் பின் ஒருவராக அரைசதம் கடந்தனர். சதம் அடித்து விடுவார் என எதிர்பார்த்த அபிஷேக் 99 ஓட்டங்களில் அவுட்டாகி ஏமாற்றம் அளித்தார். ஆனால் மறுமுனையில் ரோகித் சர்மா அசத்தலாக சதம் கடந்தார்.

**பவுலிங் கலக்கல்** - ஆரம்பத்தில் இருந்தே வேகப்பந்து வீச்சில் அசத்திய புவனேஷ்வர் நேற்று மும்பை அணியின் ஐந்து விக்கெட்டுக்களை கைப்பற்றி ஜொலித்தார். முதல்நாள் ஆட்டநேர இறுதியில் மும்பை அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட் இழப்பிற்கு 297 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. ரோகித் சர்மா 113, அகார்கர் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருக்கின்றனர். இன்றைய ஆட்டத்தில் மும்பை அணியை விரைவில் ஆட்டமிழக்கச் செய்து, முதல் இன்னிங்சில் அதிக ஓட்டங்கள் குவித்தால், உ.பி அணி வெற்றிக்கு போராடலாம்.

**பீட்டர்சன் தான் விலகினார் - இ.சி.பி. அறிவிப்பு**

இந்திய தொடர் முடிந்ததும் கிறிஸ்துமஸ் விழாவுக்கு முன்பாக பதவி விலக பீட்டர்சன் விரும்பியதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை (இ.சி.பி) துணைத் தலைவர் ரெனிஸ் அமிஸ் தெரிவித்து இருக்கிறார்.

இந்திய தொடர் முடிந்து தாயகம் சென்ற இங்கிலாந்து அணியில் புயல் வீசியது. பயிற்சியாளருடன் ஏற்பட்ட மோதலால் அணியின் அணித்தலைவர் பீட்டர்சன் ராஜினாமா செய்தார். ஆனால் கிரிக்கெட் போர்டின் நிர்பந்தத்தினால் தான் அணித்தலைவர் பதவியில் இருந்து விலகியதாக பீட்டர்சன் தெரிவித்தார்.

இதற்கு இ.சி.பி துணைத்தலைவர் ரெனிஸ் அமிஸ் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியது - இந்தியாவுக்கு எதிரான தொடர் முடிந்தவுடன், கிறிஸ்துமஸ் விழாவுக்கு முன்பாக அணித்தலைவர் பதவியில் இருந்து விலகுவது சம்பந்தமாக பீட்டர்சன் என்னிடம் பேசினார். ஆனால் நாங்கள் விடுமுறையில் தென்ஆபிரிக்கா சென்றுவந்த பிறகு இதைப்பற்றி பேசலாம் என்று அவரிடம் தெரிவித்தோம். அதற்குள் ராஜினாமா செய்துவிட்டார். இவ்வாறு ரெனிஸ் அமிஸ் தெரிவித்தார்.

**இலங்கை வெற்றி**

ஜிம்பாப்வே அணிக்கு எதிரான முத்தரப்பு தொடரின் இரண்டாவது லீக் போட்டியில் இலங்கை அணி 130 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அசத்தியது.

வங்கதேசம் சென்றுள்ள இலங்கை, ஜிம்பாப்வே அணிகள் முத்தரப்பு ஒருநாள் தொடரில் விளையாடுகின்றன. முதல் லீக் போட்டியில் ஜிம்பாப்வே அணி, வங்கதேசத்தை வீழ்த்தியது. மிர்பூரில் நேற்று நடந்த இரண்டாவது லீக் போட்டியில் இலங்கை, ஜிம்பாப்வே அணிகள் மோதின. Toss வென்ற ஜிம்பாப்வே பீல்டிங் தேர்வு செய்தது.

மாத்தீவ்ஸ் நம்பிக்கை - முதலில் களமிறங்கிய இலங்கை அணிக்கு உபுல் தரங்கா (43), ஜெயசூரியா (22) நல்ல துவக்கம் தந்தனர். அடுத்து வந்த சங்ககரா (4), ஜெயவர்தனா (0), கபுகேதரா (4), ஏமாற்ற இலங்கை அணி 97 ஓட்டங்களுடன் 5 விக்கெட்டை இழந்து திணறியது. பின்னர் வந்த முபாராக் (31) ஓரளவு ஓட்டங்கள் சேர்த்தார். பின்னர் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மாத்தீவ்ஸ் (52), துஷாரா (28) கடைசிவரை அவுட்டாகாமல் அணியின் புள்ளிவிபரத்தை உயர்த்தினர். இலங்கை அணி 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 210 ஓட்டங்கள் எடுத்தது. ஜிம்பாப்வே சார்பில் ரெயின்ஸ்போர்டு 3 விக்கெட் விழ்த்தினர்.

**பந்துவீச்சு அபாரம்** - 211 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஜிம்பாப்வே அணி 28.2 ஓவரில் 80 ஓட்டங்களுக்கு ஆல் அவுட்டாகி 130 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது. ஜிம்பாப்வே வீரர் மட்சிகென்யரி மட்டும் 15 ஓட்டங்கள் எடுத்தார். மற்றவீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் அவுட்டானார்கள். மெண்டிஸ், குலசேகரா தலா 3, முரளிதரன் 2 விக்கெட் கைப்பற்றினர். மாத்தீவ்ஸ் ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார். இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி 5 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

மிர்பூரில் நாளை நடக்கும் கடைசி லீக் போட்டியில் இலங்கை, வங்கதேச அணிகள் மோதுகின்றன.

மெண்டிஸ் சாதனை - நேற்றைய ஆட்டத்தில் இலங்கையின் அஜந்தா மெண்டிஸ் புதிய சாதனை படைத்தார். இவர் ஜிம்பாப்வே வீரர் பிரைஸ் விக்கெட்டை வீழ்த்தி குறைந்த போட்டிகளில் 50 விக்கெட்டுகள் என்று சாதனை படைத்துள்ளார்.

**அவுஸ்திரேலியா VS தென்ஆபிரிக்கா "20"**

தென்ஆபிரிக்காவுக்கு எதிரான ரூவென்ரி 20 கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியா 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது.

மெல்போர்னில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் ஆடிய அவுஸ்திரேலியா 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 182 ஓட்டங்கள் விளாசியது.

தொடர்ந்து விளையாடிய தென்ஆபிரிக்கா 18 ஓவர்களில் 130 ஓட்டங்களுக்கு ஆட்ட மிழந்தது.

132 ஆண்டு கால அவுஸ்திரேலிய கிரிக்கெட் வரலாற்றில் முதல் தர ஆட்டத்தில் விளையாடாமலேயே, தேசிய அணிக்காக களமிறங்கிய டேவிட் வார்னர் 43 பந்துகளில் 6 இமாலய சிக்சர், 7 பவுண்டரிகளுடன் 89 ஓட்டங்கள் விளாசி ஆட்ட நாயகன் விருதை தட்டிச் சென்றார். வார்னர் 19 பந்துகளில் அரை சதம் கடந்து அசத்தினார். ரூவென்ரி 20 ஆட்டங்களில் இவரை விட அதி வேகமாக அரை சதம் அடித்தவர் (12 பந்துகளில்) இந்தியாவின் யுவராஜ் சிங் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.


தென்ஆபிரிக்கத் தரப்பில் ஜே.பி.டு மினி 48 பந்துகளில் ஒரு சிக்சர், 9 பவுண்டரிகளுடன் 78 ஓட்டங்கள் விளாசினார். ஆனால், முன்னதாக ஹெர்ஷல் கிப்ஸ் (0), அப் டிவில்லியர்ஸ் (0), காலிஸ் (4) ஆகியோர் விரைவிலேயே பெவிலியன் திரும்பினர். அவுஸ்திரேலியத் தரப்பில் டேவிட் ஹசி 3விக்கெட்டுகளும், பிராக்கன், டெய்ட், பென் ஹில்பென்ஹாஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளும் கைப்பற்றினர்.

வார்னர் புதிய கில்கிறிஸ்ட் - பாண்டிங் பாராட்டு


முதல் 'ரூவென்ரி - 20' போட்டியில் அதிரடியாக ஓட்டங்கள் குவித்த வார்னர், அவுஸ்திரேலிய அணியின் புதிய கில்கிறிஸ்ட்டாக உருவெடுத்து இருக்கிறார்.' என அணித்தலைவர் பாண்டிங் புகழ்ந்துள்ளார்.

அவுஸ்திரேலியா சென்றுள்ள தென்ஆபிரிக்கா இரண்டு போட்டிகள் கொண்ட 'ரூவென்ரி - 20' தொடரில் பங்கேற்று வருகிறது. இந்த வெற்றிக்கு, அணியின் அறிமுக துவக்க

**தொடர்ச்சி 14ஆம் பக்கம்**



**எஸ். கணேஷ்**


**Raphael Maharaja**
**Barrister, Solicitor & Notary Public**
**கனேடியத் தமிழ் வழக்கறிஞர்**

- வீடு, காணி, வர்த்தகச் சட்டம்
- அகதி, குடிவரவுச் சட்டம்
- விபத்து இழப்பீடு
- குடும்பச் சட்டம்
- தத்துவப் பத்திரம், இறுதி விருப்பாவணம், சத்தியப் பத்திரம்
- ஆங்கில, தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பு

> Real Estate & Business Law
> Refugee & Immigration Law
> Personal Injury
> Family Law
> Estate Planning, Power of Attorney & Affidavits
> English, Tamil & Sinhala Translation

**Tel: 416-847-7077 Fax: 416-847-7088**

# OFFICE SPACE VACANCY IN CANADA

பொதுவாக ஒரு நாட்டில் பொருளாதார இறக்கம் ஏற்படும் போது, ஆஸ்தி வியாபாரம் மந்த நிலையை அடையும். பிற்பாடு வியாபாரம் செய்யக்கூடிய கட்டிடங்களிலுள்ள அலுவலகங்கள் நடத்தக்கூடிய இடங்களின் தேவை மெல்ல மெல்லக்குறையத் தொடங்கும். 2008 இன் பிற்பகுதியில் வீட்டின் விலையில் இறக்கம் ஏற்பட்டதை கடந்த இதழில் பார்த்திருந்தோம். ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகள் ஓரளவு விற்பனையாகியுள்ளன. விற்கப்படாமல் இருக்கும் புதிய வீடுகளின் விற்பனை மந்த நிலைமையை அடைந்துள்ளது. இதே நிலைமை புதிதாக கட்டப்பட்டு கொண்டு இருக்கும் அடுக்குமாடிக் கட்டிட அலகுகளிற்கும் (Condominium Units) பொருந்தும். அத்துடன் புதிதாக விற்பனை செய்யப்படும் அலுவலகங்களிற்கும் பொருந்தும்.

வியாபாரம் நடத்தக்கூடிய கட்டிடங்கள் பல கட்டிட நிர்மாண வேலைகள் இடைநிலையில் நிறுத்தப்பட்டுள்ளன. போதியளவு அலகுகள் விற்கப்படாத நிலையில் இந்நிலைமை தொடர்கின்றது. ரொறொன்ரோவின் பெரும்பாகத்தில் ஏறத்தாழ 30 கட்டிடத்தொகுதிகளில் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. கல்கறி, வன்கூவரிலும் இதே நிலைமையே காணப்படுகிறது. ஆனால் இவ்வாறு, நிறுத்தப்பட்ட கட்டிடத்தொகுதிகளினால் எதிர்காலத்தில் கூடியளவு Demand ஏற்படலாம். குறிப்பிட்ட காலத்திற்கே இந்நிலமை தொடரும். பின்னர் நிலைமை மாறலாம்.

அலுவலக இடத்தை பார்க்கும்போது (Office Spaces) ரொறொன்ரோ, மொன்றியல், வன்கூவர், கல்கறி போன்ற நகரங்களில் ஏற்கனவே கட்டப்பட்ட கட்டிடங்களிலுள்ள அலுவலகம் நடத்தக்கூடிய இடம் (Space) சந்தைக்கு வர உள்ளன.

கனடாவில் அண்ணளவாக 400,000,000 (400 மில்லியன்) சதுரஅடி அலுவலக இடம் (Space)



உள்ளது. இதில் 162 மில்லியன் சதுரஅடிக்கு மேற்பட்டது ரொறொன்ரோவின் பெரும்பாகத்தில் காணப்படுகின்றது. கிட்டத்தட்ட 40%. அதனைத் தொடர்ந்து மொன்றியல், வன்கூவர், கல்கறி நகரங்களிலும் காணப்படுகின்றது.

2009 ஆம் ஆண்டு, 2010ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 10 மில்லியன் சதுரஅடி புதிய இடவெளி ரொறொன்ரோவின் பெரும்பாகத்தில் வரஇருக்கின்றது. இதில் இந்த வருடம் (2009) வர இருக்கும் மூன்று மில்லியன் சதுர அடியும் அடங்கும். இந்த அலுவலக இடம், பொதுவாக Financial Service Industry இலே தங்கியுள்ளது. ஆனால் இன்று உள்ள பொருளாதார நெருக்கடியில் என்ன நடக்கலாம் என்று கூறமுடியாது? மிக முக்கியமாக நிதி நிறுவனங்களின் நிலைமை ஆரோக்கியமாக இல்லை.

இவ்வாறே கல்கறியில் அடுத்து வரும் வருடங்களில் ஒன்பது மில்லியன் சதுரஅடி, சந்தைக்கு வர உள்ளது. அல்பேட்டாவில் ஏற்பட்ட, Oil and Gas வியாபார இறக்கத்தால் இங்கும் வாடகைக்கு கொடுக்க நெருக்கடி ஏற்படலாம். இதனால் ரொறொன்ரோவிலும், கல்கறியிலும் Vacany Rate அதிகரிக்க கூடிய சந்தர்ப்பங்களே அதிகமாகக் காணப்படலாம். இதனால் வாடகைக்குரிய செலவு குறையக்கூடியதாக இருக்கும்.

ஆனால் இன்றைய நிலைமையில் ஒருவராலும் குறிப்பிட்டு சொல்லக்கூடியதாக இருக்காது. இதனால் இந்தக்கால கட்டத்தில் வாடகை இடங்களில் வியாபாரங்களை நடத்துவது அதிக நன்மையபக்கும். வியாபாரம் செய்பவர்கள் தமது மாதாந்த செலவைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு.

இப்பொழுதுள்ள பொருளாதார இறுக்கம் (Recession) 90 களிலே உள்ள மாதிரி அல்ல. மிகப் பெரிய வித்தியாசமே. இப்பொழுது, அனேகமான கட்டிங்களை கட்டியவர்கள் பொருளாதாரத்தில் மிகவும் உறுதியான நிறுவனங்கள் (உதாரணம் - Major Pension Fund) இதனால் கட்டிடங்களை, Bankruptcy இற்கு போகும் சந்தர்ப்பங்கள் குறைவாகும்.

மற்றும் ரொறொன்ரோவிலும், கல்கறியிலும் சந்தைக்கு வர இருக்கும் இடங்களில் 50% இற்கு மேற்பட்டவை ஏற்கனவே வாடகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், ஏற்கனவே வாடகைக்கு எடுத்தவர்கள், தமது தொழில் தொடங்குவதால் உறுதியாக உள்ளார்கள். கடந்த வருடத்தின் இறுதிக்காலத்தில் Vacany Rate குறைவாகவே காணப்பட்டது. (அட்டவணையைக் கீழே பார்க்கவும்)

எதிர்வரும் வருடங்களில் Vacany Rate இரண்டு மடங்கால் அதிகரித்தாலும் (12%) அமெரிக்காவில் சில நகரங்களுடன் (உதாரணம் சிக்காக்கோ 18%, Dallas 20%) ஒப்பிடும்போது குறைவாகவே காணப்படும். 2001 இல் ஏற்பட்ட Dotcom இல் ஏற்பட்ட நெருக்கடிக்கு பிற்பாடு கிட்டத்தட்ட 2.2 மில்லியன் அலுவலுக Space சந்தைக்கு வந்தது. இதனால் நெருக்கடி ஏற்பட்டது. அப்படி ஏதாவது நிலைமை ஏற்பட்டால் ஒழிய பெரிதான Office Space, கட்டிங்களிற்கு நெருக்கடிகள் ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது.

இந்தக்காலக்கட்டத்தில், வாடகைக்கு இருப்பவர்கள், தமது அலுவலக கட்டிட உரிமையாளரிடம் வாடகையை குறைப்பதுடன், தேவைக்கேற்ப வாடகைப் பத்திரத்தையும் மாற்றி எழுதிக் கொள்ளலாம். முக்கியமாக பழைய கட்டிடங்களில் இருக்கும் வாடகையாளர்கள், இலகுவாக 'Negotiate' பண்ணிக் கொள்ளலாம். பொதுவாக வாடகையாளர்கள் தொழிலுக்கும்

**Office vacancy, by city**

| Market | Inventory ('000s sq. ft.) | Vacancy rate Q3, 2008 | Projected vacancy rate Q4, 2008 | Projected vacancy rate Q4, 2009 |
|---|---|---|---|---|
| Vancouver | 46,179 | 4.6% | 5.2% | 7.1% |
| Calgary | 51,101 | 5.7% | 7.3% | 8.4% |
| Winnipeg | 11,829 | 6.9% | 7.2% | 8.2% |
| Toronto | 162,203 | 5.1% | 5.8% | 8.6% |
| Ottawa | 36,002 | 6.8% | 7.5% | 8.9% |
| Montreal | 82,322 | 8.0% | 8.0% | 9.2% |
| Fredericton | 1,888 | 2.7% | 2.5% | 2.0% |
| Saint John | 1,990 | 5.6% | 5.5% | 1.8% |
| Moncton | 2,641 | 10.6% | 10.3% | 9.2% |
| Halifax | 9,166 | 9.0% | 10.5% | 10.7% |
| St. John's | 2,497 | 4.2% | 4.2% | 4.1% |
| National | 407,817 | 6.0% | 6.6% | 8.5% |

DOUGLAS COULL/THE GLOBE AND MAIL ▸ SOURCE: CUSHMAN & WAKEFIELD LePAGE

சுகாதாரத்திற்கும் ஏற்ற புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடங்களையே விரும்புகின்றார்கள். எனவே வாடகையாளர்கள் இச்சந்தர்ப்பத்தை பாவிப்பதே சிறந்தது. இந்நிலைமை எவ்வளவு காலம் தொடரும்....?

நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர் - 290


ஸ்காபரோ, மிசிசாக 2 இடங்களில், 125இற்கு மேற்பட்ட வெற்றிபெற்ற வீட்டுப்பிரதிநிதிகள்

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969** /145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

*Independently owned & operated



**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

# CATERING / RESTAURANT FOR SALE

- *Running business*
- *Location: Markham / Eglinton*
- *Resonable Rent*
- *Recently renovated*
- *Asking price $45,000 only*
- *Don't miss this chance*

**Nantha Aiyadurai**
Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service
OTTAWA> > > < < <GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# நீறணி பதிகம்

நீறணிவோம் திரு நீறணிவோம் - உயர்
ஏறுடைய சிவப் பிள்ளையினை - ஏத்தி
நீறணிவோம் திரு நீறணிவோம்.

மாறுபடு கய மாமுகனை - வென்ற
வீறுடைய பிள்ளை மேன்மைதனைப் - போற்றி
நீறணிவோம் திரு நீறணிவோம்.

ஆறுமுகர் அண்ணர் ஆனைமுகர் - வெற்றி
நீறணிகொள் நெற்றிக் கண்ணுடையார் - இன்ப
நீறணிவோம் திரு நீறணிவோம்.

மீறிவருந் துயர் தீர்த்தருளி - நல்ல
ஆறுதலைத் தரும் ஆனைமுகர் - அணி
நீறணிவோம் திரு நீறணிவோம்.

ஏறிடுவர் எலி மிதினிலே - பொருள்
கூறிடுவர் வேத வியாசருக்கே - அவர்
நீறணிவோம் திரு நீறணிவோம்.

சீறிவரும் பகை கூறுபட - அருள்
மீறிவரச் செயும் விநாயகரைப் - பாடி
நீறணிவோம் திரு நீறணிவோம்.

தேறிவரச் செல்வம் தேடிவரப் - புகழ்
ஆறுசெயும் எங்கள் ஐங்கரனார் - பூசும்
நீறணிவோம் திரு நீறணிவோம்.

ஊறிவரக் கவி ஒத்துவருந் - தமிழ்
மீறிவரச் செயும் விநாயகரின் - அருள்
நீறணிவோம் திரு நீறணிவோம்.

நீறுசெயப் புரம் மூன்றினையும் - சிவன்
ஏறியதேர் தனை இருத்தியவர் - சித்த
நீறணிவோம் திரு நீறணிவோம்.



ஆறுதலைச் சிவன் மூத்தபிள்ளை - வினை
பாறிவிழ அருள் பாலிப்பவர் - நெற்றி
நீறணிவோம் திரு நீறணிவோம்.



கவிஞர் வி. கந்தவனம்

# தொல்சீர் செந்தமிழ்




மலை முகட்டிலிருந்து
பாய்ந்து
ஐநிலங்களில் வளைந்தோடி
ஆழியில் சங்கமித்து
நீச்சலடித்து
ஆதவனை முழுங்கி
முழுநிலவென
வெளிச்சம்
கொடுக்கின்றது

நேர்கொண்ட பார்வையில்
ஞானவிழி சுழல்கின்றது
நெற்றியில் ஊறிய ஒளி
அகிலமெங்கும்
பெருக்கெடுத்து
ஓடுகின்றது

ஏரிகளை நிறைத்து
காட்டு நிலத்திற்கும்
கட்டாந் தரைக்கும்
களனி வயலெங்கும்
வளம் கொடுக்கின்றது

காவேரி வைகை
தண்பொருணை
நதிகளின்
வண்டல் மணல்களில்
கட்டி எழுப்பிய

'மன்றில்'
நம் மூதறிஞர்களினால்
வளர்த்தெடுக்கப்பட்டது

தேன்
சொரியும் அமுதமாக
இன்று
உலக நரம்பெங்கும்
உயிர்களை
வளர்க்கின்றது.



முத்துராஜா


## EMPLOYMENT & ENTREPRENEURIAL
### CAREER OPPORTUNITIES IN CREDIT MANAGEMENT



• Collections • Mediation • Marketing • Counselling
• Interpretation • Translation

Providing Opportunities for Newcomers, Community and Career Colleges
In Banking, Business, Accounts Receivable & Payable, Credit & Collections
Mentoring for Professional Designation with Credential Backgroud

**Samy Ramachandran**
Consultant
Personal and Financial Services

Member of:
• Credit Institute of Canada
• Credit Association of Toronto
• Credit Counseling Service of Toronto

**Information Sessions**
Employment Centres
Collection Departments and Agencies


**Dir: 416.760.2183**
**Fax: 416.296.0737**
**samy_consulting@hotmail.com**

• Education • Entrepreneurship • Employment


# பூக்கும் புத்தாண்டு புதுயுகமாகுக!

பல்லவி:

வரமருள் விநாயகா
நலமுடன் நாம் வாழ
வரமருள் விநாயகா



அனுபல்லவி:

பூக்கும் புத்தாண்டில் புதுயுகம் நாம்காண
காக்கும் கணபதியே கைதொழ வந்தோம்நாம்

சரணம்:

புலம்பெயர் மண்ணிதிலே நலம்பெற நாம்கூடி
நாடினோமுன் சன்னிதியில் நாயகா வரமருள்வாய்
வாடிநொந்து உந்தன் தாளினைச் சரணடைந்தோம்
வரசித்தி விநாயகனே வளமுடன் வாழவைப்பாய்

ஈழத்தில் எம்மவர்கள் இனிதே வாழ்ந்திடவும்
வெஞ்சமர் பயம்பிணிகள் வேருடன் அறுந்திடவும்
ஆழிஅனர்த்தங்கள் அச்சங்கள் தீர்ந்திடவும்
வாராயோ எங்கள் வரசித்தி விநாயகனே

மழைபொழிக நன்கு வயல்பெருக - மக்கள்
மனைபெருக எங்கும் வளம்பெருக
படைபெருக எங்கள் பலம் பெருக - நாம்
எமையாள இறைவா அருள்புரிக! (எமக்கு)

(நாம் எமையாள இறைவா எமக்கு அருள்புரிக!!!)

*(இறுதியாக எடுக்கும் வரியினை உச்ச தொனியில் பாடி மீண்டும் பல்லவி பாடவும்)*

*- ஆக்கம்: அருட்கவி ஞானகணேசன்*

# வாகன காப்புறுதி & விபத்துகள் நட்டஈடு கோரல் வரலாறுகளை பதிவு செய்து வழங்கும் சி.ஜி.ஐ நிறுவனம்

## (C.G.I. Gruop Inc) AUTO PLUS REPORT

**சி.ஜி.ஐ தகவல் மையம்** - *(C.G.I. Gruop Inc)* - 1976ஆம் ஆண்டு! ஜுன் மாதம் கனடாவில் இரு பங்குதாரர்களினால் ஆரம்பிக்கப்பட்டு, இன்று கனடா, அமெரிக்கா உட்பட உலகின் ஏனைய சில நாடுகளிலும் வெவ்வேறு மொழிகளிலும் தகவல் தொடர்புகளை வழங்கும் ஒரு பல்தேசிய 'தகவல் தொழில்நுட்ப நிறுவனம்' ஆகும்.

பல ஆயிரக்கணக்கான ஊழியர்களை கொண்டு, பல மில்லியன் இலாபம் சம்பாதிக்கும் கம்பனிகளிலும் இதுவும் ஒன்றாகும். இந்நிறுவனம் அரசாங்கம், வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், கூட்டுஸ்தாபனங்கள் மற்றும் பாரிய கம்பனிகள் யாவற்றுக்கும் தேவையான தகவல்களை வழங்கி வருகின்றது.

இங்கு கனடாவில் வாகன காப்புறுதி செய்து கொள்ள விரும்பும் ஒருவர் காப்புறுதி கம்பனியினையோ அல்லது முகவர் நிலையம் ஒன்றினையோ அணுகும் போது, காப்புறுதி செய்து கொள்ள விரும்புபவரின் ஏற்கனவேயிருந்த வாகன காப்புறுதிகள், ஏற்கனவே வாகன விபத்துகளில் நட்டஈடுகள் கோரிய வரலாறுகள் யாவற்றினையும், ஒவ்வொருவரின் சாரதி அனுமதி இலக்க பத்திரத்தினை அடையாள குறியாக பதிந்து வைத்திருந்து காப்புறுதி தொடர்பான விலையினை தீர்மானிப்பதற்கு காப்புறுதி கம்பனிகளுக்கு இந்நிறுவனம் இலகுவாக வழங்கி விடுகின்றது.

விரும்பினால் அவரவர் தமது வாகன காப்புறுதி தொடர்பான வரலாற்று பதிவுகளை இந்நிறுவனத்திலிருந்து பெற்று பரிசீலனை செய்து பார்க்கலாம்.

**'ஓட்டோ பிளஸ் ரிப்போர்ட்'** ***(AUTO PLUS REPORT)*** என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் இந்நிறுவனத்தின் அறிக்கையில் பின்வரும் விடயங்கள் ஒவ்வொருவரினதும் பதிவு செய்யப்பட்ட வரலாறாக காட்டும்.

1. தங்களின் பெயர், வாகனம் வைத்து ஓட்டிய விலாசம், நகரம், பிறந்த திகதி ஆண்டு, சாரதி அனுமதி பத்திர இலக்கம்.
2. எந்த வாகன காப்புறுதியில், எந்த வாகனத்திற்கு (அதன் அடிப்படை உற்பத்தி இலக்கமும் குறிப்பிட்டு) எந்த ஒப்பந்த இலக்கத்தில் வாகனகாப்புறுதி ஒப்பந்தம் செய்து வைக்கப்பட்டிருந்தது.?
3. எந்தக் காலம் தொடக்கம், எந்த காலம்வரை வாகன காப்புறுதி ஒப்பந்தம் வலிமையாக இருந்ததது? என்ன தேவைக்கு வாகனம் உபயோகிக்கப்படுகின்றது.
4. மேலதிகமாக வீட்டில் உள்ளவர்களின் பெயர்கள் வாகன காப்புறுயில் பதிவு செய்யப்பட்டிருந்தால் அவர்களின் பெயர், பிறந்த ஆண்டு, திகதி, சாரதி அனுமதி பத்திர இலக்கங்கள் தொடர்பான விபரங்கள்.
5. ஒவ்வொரு வாகன சாரதியும் சாரதி அனுமதி பத்திரம் பெற்று எவ்வளவு காலம்? முழுமையான வாகன பயிற்சிக்கு தோற்றிய விடயங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதா?
6. வாகன காப்புறுதியில் எந்த வகையான நட்டஈடு பிரிவு ஒப்பந்தங்கள் செய்து வைத்துள்ளீர்கள்?
7. விபத்து ஒன்றினை எதிர் கொண்டிருந்தால் எப்போது? எவரோடு (விபத்தில் மோதிய ஏனையோரின் மேலோட்டமான விபரங்களும் பதிவு செய்யப்பட்டு இருக்கும்) விபத்து நடந்தது? இதில் சரி? பிழை? எந்த பக்கம்? எந்த விகிதத்தில்? எவ்வளவு தொகைகள்? எந்த பிரிவின் கீழ் நட்டஈடாக காப்புறுதி கம்பனிகளினால் பரிமாறப்பட்டு இருந்தன?


சிவ. பஞ்சலிங்கம் B. Com,

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


இங்கு விபத்து தொடர்பான தகவலின் கீழ் விபத்து நட்டஈடு வழங்கலின் தீர்ப்பு என்பது ஒரு சிறு குறியீடாக இருக்கும். அதாவது
Fault - 0% (தப்பு என்பது 0% வீதம்)
Fault - 100% (தப்பு என்பது 100% வீதம்)
Fault - 50% (தப்பு என்பது 50% வீதம்)

ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வாகன காப்புறுதி கம்பனிகளுக்கு நட்டஈடு கோரும் நோக்கத்துடனேயோ அல்லது வேறு வழிகள் மூலமோ நடைபெற்ற விபத்துகள் தொடர்பாக அறிவிக்கும்போது, இப் திவுகள் யாவும் காப்புறுதி கம்பனிகளினூடாக இத்தகவல் மைய நிறுவனத்திற்கு போய் சேரும் போது அங்கு இவைகள் யாவும் ஒரு அழிக்க முடியாத வரலாறாக பதியப்படுகின்றது.

இவ்வரலாற்று பதிவுகளை விரும்பினால் ஒவ்வொருவரும் நேரடியாக இந்நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு, தொலைநகல் மூலம் அல்லது மின் அஞ்சல் மூலம் கைச்சாத்திடப்பட்ட விண்ணப்பம் அனுப்பி பெற்று கொள்ளலாம். நிறுவனத்தின் முகவரி

*CGI TECHNICAL ASSISTANCE CENTER*
*1350, RENE - LEVESQUE WEST, 7TH FLOUR*
*MONTREAL, Quebec H3G 1T4*
தொலை நகல் - 514.415.3989
மின் அஞ்சல் - ***insurance-helpdesk@cgi.com***

மனு கிடைத்து பத்து நாட்களுக்குள் வரலாற்று அறிக்கையினை தபாலில் அனுப்பி வைப்பார்கள். விரும்பினால் காப்புறுதி முகவர் அலுவலகங்களின் ஊடாக உடனடியாகவும், பெற்று கொள்ளலாம்.

இந்த காப்புறுதி, விபத்துகள் தொடர்பாக பதியப்பட்டிருக்கும் வரலாற்று பதிவுகளில் கடந்த காலங்களில் எங்கள் வாகன விபத்து ஒன்றில் நடந்த தீர்ப்பு என்பது தப்பாக பதியப்பட்டிருந்தால் அது தப்பு என குறிப்பிடப்பட்டு இருந்தால் அதனை எந்த வகையிலும் நாம் மாற்றியமைக்க முடியாது. அவ்வாறு மாற்றியமைக்கப்பட வேண்டுமானால் அது தொடர்பாக ஏற்கனவே நடந்து குறிப்பிட்ட பதிவுக்கு போயிருந்த விபத்து என்பது தங்களில் தப்பு இல்லை என்பதனை தங்களின் வாகன காப்புறுதி கம்பனியின் முறைப்பாட்டு பிரிவுக்கோ அல்லது பொதுவாக சகல கம்பனிகளுக்கும் உள்ள முறைப்பாட்டு பிரிவுக்கு மனு செய்து அவர்களினால் இது நியாயமாக ஏற்றுக் கொள்ளப்பட்டால் மட்டும் தொடர்ந்து தகவல்களை வழங்கிய வாகன காப்புறுதி கம்பனிகளினால் மட்டும் வரலாற்றுப் பதிவுகளில் திருத்தம் செய்யலாம்.

**ஒவ்வொருவருக்கும் வாகன காப்புறுதியின் விலையினை நிர்ணயிக்கும் போதும், ஏற்கனவே இருந்த காப்புறுதியினை வருடம் தோறும் புதுப்பிக்கும் போதும் இவ்வரலாற்று பதிவுகளின் அடிப்படையிலேயே முடிவுகள் எடுக்கப்படுகின்றது.**

வாகன காப்புறுதியின் விலையினை தீர்மானிக்கும் போதும், புதுப்பித்தலின் போதும் விலையினை தீர்மானிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கும் இன்னொரு வரலாற்று பதிவு மாகாண போக்குவரத்து அமைச்சினால் வழங்கப்படும் - வாகனமோட்டும் குற்றசாட்டு பதிவுகள் (Driving Record) ஆகும். வாகனமோட்டும் ஒவ்வொருவரும் வீதி ஒழுங்கு சட்டங்களை மீறி தண்டனைக்குட்பட்ட போதும், இதற்காக புள்ளி மதிப்பீட்டு இழப்புகளை எதிர் கொள்ளும் போதும் இவைகள் யாவும் மாகாண போக்குவரத்து அமைச்சின் பதிவுகளில் ஒவ்வொருவரின் சாரதி அனுமதி பத்திர இலக்கத்திலும் மூன்று வருடங்களுக்கு பதியப்பட்டு இருக்கும்.




ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது

என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்



சகல வசதியுடன் முதியோர் இல்லம்
Senior Home Condo.
14 Acre land
1200 sq. ft. Etobicoke
$200,000
or Brand New - Scarborough

YUNKYARD
5 Acre (Metal Scarp)
Yard with Big House
2 Family Income with Shop

13 Acre land with Brick house Kennedy Rd. under $350, 000

Bankrupt + Properties power of sale Brampton, Scarborough, Richmond Hill

Big land lots Bangalow, 3 bedroom House
Airport / Brampton Mississauga, $250 - 300,000

வீடும் வியாபாரமும் Business Zoning

Future long term Investment

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு அழையுங்கள் - Sam Sitham (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.





யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# ‘நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்’’

## மூலிகைப்பொருட்கள் இரச குணவீரிய விபாங்களுக்கு (தன்மைகளுக்கு ) ஏற்ப வியாதிகளைக் குணமாக்கும்

## இலவங்கம் -



இதன் தாவரவியல் பெயர் EUGENIA CARYOPHYLLATA ஆகும். இதன் ‘பூ’ தான் கராம்பாகும். இதன் பட்டை ‘கறுவா’ இதன் இலை, இலைவங்கப் பத்திரியாகும். இவை மணம் கொண்டவை. காரம் கூடிய உஸ்ணத் தன்மை வாய்ந்தது. ஓரளவு உறைப்புத் தன்மையும் உண்டு.

எனவே இதன் இலை இங்கு கிடைப்பது கடினம். மற்றும் இருவகை மூலிகைச்சரக்குகளை நமது வர்த்தகர்களின் கடைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.

நாம் வீட்டில் தயாரிக்கும் சமையல் மசாலவர்க்கத்திற்கு அதிகம் எடுத்துக் கொள்ளவார்கள். இதனை சில மருந்துகளில் தயாரிக்கும் போது வைத்தியர்கள் சேர்ப்பதுண்டு. இதன் செயலை நாலடியில் விளக்கப்படுகின்றது.

பித்த மயக்கம் பேதியொடு வாந்தியும் போம்
சுத்தவிரத்தக்க கடுப்புந் தோன்றுமோ - மெத்த
இலவங்கம் கொண்டவருக்கேற் சுகமாகும்
மலமங்கே கட்டுமென வாழ்த்து

இதன் தன்மையை மேலும் பார்ப்போம். தலையிடி, தலைப்பாரம் காணப்படும் இடத்து கராம்பை எடுத்து நீர்விட்டு அரைத்து பற்றாக நெற்றில் இட யாவும் தணிந்து பூரண சுகம் கிடைத்து விடும்.

சித்த ஆயுர்வேதவைத்தியர்கள் தயாரிக்கும் மருந்துகள் சிலவற்றில் கூட்டுச்சரக்குகளுடன் சேர்த்துக்கொள்வர்.

உதாரணமாக
ஏலாதி சூரணம், திருமூர்த்தி சூரணம் தானிஸாதி சூரணம், ஸீதோபலாதி சூரணம், வில்வாதி லேகியம், மூல வியாதிநிவாரண லேகியம் சுவாச காச தைலம் என்பவற்றை எடுத்துக் கூறலாம். நன்கு நோயை நிதானித்து உரியவர்களுக்கு கொடுத்து வருவார்கள்.

கறுவாய் பட்டையை எடுத்துக்கொண்டால் வாய் நாற்றத்தைப் போக்கக்கூடியது. வெப்பத்தை ஏற்படுத்தும் தன்மை வாய்ந்தது. இதனை அதிகம் பாவிப்பது நன்றல்ல. இதில் இருந்து தயாரிக்கப்படும் தைலம் பல்வலி, தலைவலி, உடல்வலி போன்றவற்றுக்கு கொடுத்து பயன் பெற்றுள்ளனர். அதுவே கறுவாய் தைலமாகும்.

## ஏலக்காய் -



இதன் தாவரவியல் பெயர் ELECARIA CARDAMOMUM ஆகும். உஸ்ணவீரியம் கொண்டது. வாயுவை அகற்றக்கூடியது. வாசனை பொருந்தியது. நாம் வீட்டில் தயாரிக்கும் பலகாரங்களில் சேர்ப்பதுண்டு.

ஏலக்காய் அதாவது ஏலம் எனவும் கூறுவர். இதன் மருத்துவக் குணத்தைச் சற்றுப்பார்ப்போம். வாயுத் தொல்லை காணப்படும் போது ஏலத்தை எடுத்து தூள் செய்து வெந்நீருடன் காலை, மாலை 1/4 தே.கரண்டி சாப்பிடமுன் பாவித்துவர கூடிய பயன்கிடைக்கும். பசித்தன்மையை ஏற்படுத்தும் சிறுநீரைப் பெருக்கக்கூடியது. உடம்பிற்கு வலுவை உண்டாக்கும். பெரும்பாலும் சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் நன்கு நோயை நிதானித்து தேவையானவருக்கு ஏலாதி சூரணம் கொடுப்பதுண்டு. இதனால் நன்மை பெற்று வந்தவர்களும் உண்டு.

சிறுநீரோடு விந்து வெளியாகும் நிலை இருந்தால் இடையிடையே ஏலக்காயை மென்று வர நற்பயன் கிடைக்கும்.

மேலும் கூட்டுச் சரக்குகளுடன் மருந்துகள் சில தயாரிக்கும் போது ஏலக்காயும் சேர்த்து தயாரிப்பதுண்டு. உதாரணமாக ஸிதோபலாதி சூரணம், பஞ்சாக்கினி சூரணம், திருமூர்த்தி சூரணம், ஏலாதி சூரணம், சித்தாதி லேகியம் என்பவற்றை எடுத்துக்கொள்ளலாம்.

## பெருங்காயம் -

இதன் தாவரவியல் பெயர் PERUAL ASAFOETIDA ஆகும். இதனைக்காயம் எனவும் கூறுவர். இது ஒருவகை பாலின் பிசினாகும். நிறத்தில் மஞ்சள் நிறமாக இருக்கும். இதனை இங்கு நமது வர்த்தகர்கள் கடைகளில் பெறமுடியும். வெந்நிறமான பெருங்காயமும் உண்டு. இது இங்கு பெறமுடியாது. இதில் உறைப்பு அதிகரித்துக் காணப்படும். ‘சோமகாயம்’ எனக் கூறுவர்.

பெருங்காயம் உஸ்ணவீரியம் கொண்டது. நல்ல மணம் உள்ளது. வாயுவை கண்டிக்கக்கூடியது. நாம் சமையலில் இரசம் வைத்துப் பாவிக்கும் போது பெருங்காயத்தை எடுத்து உரைத்து இரசத்துடன் சேர்த்து பாவித்துவந்தால் வாயு தன்மை நீங்கிப் பசியும் ஏற்படும்.

கக்குவான் போன்ற இழுப்பான வியாதி உள்ள பிள்ளைகளுக்கு பெருங்காயத்தை உரைத்து மார்பில் பூசிவிடக் கக்குவான் வியாதி மாறி விடும். பெருங்காயத்தை எடுத்து வெந்நீரில்




நனைத்து உரைத்து சிறிது தேன் கூட்டிக்கொடுத்து வர சளியை அகற்றி சுகநிலை அடைய வழிவகுக்கும்.

இப்பெருங்காயம் நீங்குவாஷ்ட சூரணம், சீரக வடகம், மாவேலிச்சூரணம் போன்றவற்றில் (வாத ரோகத்திற்கு பாவித்தல்) கூட்டுச் சரக்குகளுடன் சேர்ப்பதுண்டு. இவைகள் பெரும்பாலும் நற்பயன் அளிக்க கூடியவையாகும்.

எதற்கும் நோய் நிர்ணயம் முக்கியம். வைத்தியர்களின் ஆலோசனை பெற்றுக்கொள்வது மிக நன்றாகும்.


**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013





**SHAWN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL**

Excellent Quality - Low Cost Training

Truck licence A-Z
From $599.00



In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.



Air brake

Fork Lift licence
From $75.00

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்: Pl. Call: Raja / Shan

**416.913.9574/416.829.0603**

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)



**YOGA - MEDITATION CLASSLESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.



நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033
Etobicoke, Woodbridge, Brampton - Harani - 416.270.1687

# ஒரு வேண்டுகோள்

இந்த நாகரிக வேகமான உலகில் மனிதன் தனது ஆத்மாவைத் தொலைத்துவிட்டு நடமாடும் இயந்திரமாக ஆகிவிட்டதை காண்கிறோம். இயற்கைக்கு எதிரான வாழ்க்கை முறையால் உடல் ஆரோக்கியம் மட்டுமன்றி மனநலமும் குறைந்து வருகிறது. உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்திருக்க நம்முன்னோர் நமக்களித்த அரும்பெரும் பொக்கிசம்தான் யோகாசனமும், பிராணாயாமம் என்பன. யோகாசனம் என்பது உடற்பயிற்சி மட்டுமன்றி மனதை தூய்மைப்படுத்தி அகமும், புறமும் இன்புற்றிருக்க உதவுகிறது. இதனை நமது இளைய தலைமுறையினரிடம் பரப்பி அவர்களை நல்வழிப்படுத்தும் பணியை நாம் மேற்கொள்வது நமது கடமையாகும்.



## யோகமுடன் வாழ யோகாசனம்

நமது உடலானது ‘பயன்படுத்து அல்லது இழந்து விடுவாய் (Use It or Loose it) என்ற அடிப்படையில் உள்ளது. நமது வாழ்வில் அதாவது 20 ஆண்டுகளுக்கு முன் நம்மால் ஓடமுடிந்தது. இப்போது நடக்க மட்டும் முடிகிறது. மேலும் இருபது ஆண்டுகள் கடந்தால் உட்கார்ந்து இருக்கத்தான் முடியும். ஏன் இந்த நிலைமை. பலருக்கு மாடிப்படிகளில் ஏறி இறங்கும் போதே, ஏன் நடக்கும்போதே அதிகமாக மூச்சு வாங்குகிறது. கால்வலிக்கிறது. இது உடல்நலத்துடன் இல்லை என்று எச்சரிக்கிறது. ஒருவருக்கு எந்த அளவுக்கு சிறுநீர் வேகமாக வெளியேறுகிறதோ அந்த அளவுக்கு உடல் ஆரோக்கியமாக இருக்கின்றதென்று அர்த்தம். பொதுவாக மனிதருக்கு 30வயது வரை உடல் நல்ல ஆரோக்கியமாக இருக்கும். 30 வயதிற்குப்பின் உடல் எடை அதிகரித்து தொந்தி ஏற்படுதல், தலைமுடி கொட்டுதல், சோம்பல், எதிலும் ஆர்வம் குறைவு, எதிலும் வெறுப்பு என்பன ஏற்படுகிறது. ஆனால் ஆசைகள் மட்டும் அதிகரிக்கின்றது. இதற்கு காரணம் என்ன? நமது உடலில் மூலாதாரம் போன்று ஆறு ஆதாரச் சக்கரங்கள் (நாளமில்லாச் சுரப்பிகள்) அமைந்துள்ளன. 30 வயதிற்குப்பின் இவைகளின் சக்திகள் குறைய ஆரம்பிக்கும் இதனால் இவற்றுடன் தொடர்புடைய இராஜ உறுப்புக்களான சிறுநீரகம், இருதயம், கல்லீரல், மண்ணீரல், நுரையீரல் என்பன பலம் இழக்க ஆரம்பிக்கும். இதனை உணர்த்த பண்டைக்கால சித்தர்கள் தமது அருட்கொடையாக யோகாசனம் பிராணாயாமம், தியானம் போன்ற பயிற்சிகளை நமக்களித்துள்ளனர். இதனை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து ஒரு குறிப்பிட்ட ஆசனம் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்புக்களையோ தாக்கி அவற்றைப் பலப்படுத்துகிறதென்ற உண்மையைக் கண்டுபிடித்துள்ளனர்.

எனது அனுபவத்தில் இவகளைப் பூரணமாக உணர்த்திருக்கிறேன். யோகாசன சிகிச்சையினால் தீர்க்கமுடியாத வியாதிகளே இல்லை. ஒருவருக்கு மூட்டுவலி என்றால் அவர் இயற்கையை விட்டு விலகி விட்டார் என்று அர்த்தம் என்கிறது யோகா மருத்துவம். அவர் மீண்டும் இயற்கைக்குத் திரும்ப ஒரேவழி யோகா செய்வது தான். இப்பயிற்சியை கற்க வயது வரம்பு இல்லை. உபகரணங்கள் இல்லை. ஆண் பெண் என்ற வித்தியாசம் இல்லை. வலி இல்லை. செலவு இல்லை. நன்றாகச் கற்றுக்கொண்டால் எந்த வியாதிக்கும் தாமே தமக்குச் சிகிச்சை அளிக்கு முடியும்.


## மருந்தில்லா மருத்துவம்

பெரும்பாலான நோய்களுக்கு காரணமாக அமைவது உடல் எடை தொந்தி கூடுதல் என்பன. இவற்றைக் குறைக்கும் வழி வகைகளை அடுத்துவரும் “விளம்பரம்” வெளியீடுகளிலிருந்து ஆராய்வோம்.

‘சிவனுக்கு தடை நந்தி
ஆரோக்கியத்துக்கு தடை தொந்தி
தொந்தி வியாதிகளுக்கு தந்தி”





# சேர நாட்டு ஸ்ரீரங்கம் - திருவட்டாறு

## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 52



“சுற்றுலாப் பயணம் என்பது இடங்களைத் தெரிந்துகொள்வது மட்டுமல்ல இதயங்களை அறிந்துகொள்வதும்தான். உணவை நுகர்வது மட்டுமல்ல உணவைப் பகிர்வதும்தான். அலை-களைத் தரிசிப்பது மட்டுமல்ல கலைகளை ரசிப்பதும்தான். பாடல்களைக் கேட்பது மட்டுமல்ல பண்பாட்டைக் காப்பதும்தான். திறந்த மனத்துடன் சுற்றுலா செல்பவர்கள் இனிய அனுபவங்களுடன் திரும்பி வருவார்கள். அவர்கள் உள்ளம் கடற்கரையாக விரிந்தும் விண்வெளியாய் உயர்ந்தும் உவகையுடன் துள்ளிக் குதிக்கிறது. உங்கள் உள்ளம் அப்படி உவகையுடன் துள்ளிக் குதிக்கும் ஒரு இடத்துக்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள்.” மிகவும் உற்சாகமாக நம்மை வரவேற்கிறார் அந்த வழிகாட்டி. இவ்வளவு சின்ன ஊரில் இப்படி கவிதை பாடும் ஒரு வழிகாட்டியை நாமும் எதிர்பார்க்கவில்லை. அந்த ஊர் திருவட்டாறு. தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்துக்கேயுரிய மலைகள் சூழ்ந்த இயற்கை அழகும் மனதை வருடும் அமைதியும் சூழ பழங்கால வரலாற்றின் சாட்சியாக இருக்கிறது திருவட்டாறு!

தமிழகத்தில் உள்ள பாடல் பெற்ற, தொன்மையான ஆலயங்களில் ஒன்றான ஆதிகேசவ பெருமாள் திருக்கோயில்தான் திருவட்டாறு சிறப்புக்கு முக்கியக் காரணம். இந்தக் கோயில் காரணமாக, சேர நாட்டு ஸ்ரீரங்கம் என்றும் அழைக்கப்படுகிறது திருவட்டாறு. பாரதத்தின் நூற்றியெட்டு வைணவத் தலங்களில் ஒன்று என்ற பெருமையும் இந்த ஊருக்கு உண்டு. இங்குள்ள ஆலயத்தை சுற்றி வட்டமிட்டுப் பரலியாறு தவழ்வதால், இத்திருத்தலம் திருவட்டாறு எனப் பெயர் பெற்றது என்கிறது தல புராணம். பழங்கால தமிழ் இலக்கியக்களில் திருவட்டாறு பற்றி ஏராளமான பதிவுகள் காணப்படுகின்றன. புறநானூற்றுப் பாடல் ஒன்றில் “வளநீர் வட்டாறு” எனப் புகழப்படுகிறது. 9-ம் நூற்றாண்டில், திருவட்டாறு ஆலயத்தைப் பதினோரு பாசுரங்களால் சிறப்பித்துள்ளார் நம்மாழ்வார். தொல்சேரர்கள் வரலாற்றிலும், பின்னர் சோழர்கள் வரலாற்றிலும், கடைசியாக திருவிதாங்கூர் மன்னர்களின் வரலாற்றிலும் இவ்வூர் முக்கியத்துவத்துடன் விளங்கியிருப்பதாக இலக்கியப் பதிவுகள் சொல்லுகின்றன. திருவிதாங்கூர் மன்னர்களின் காலத்தில் அவர்களது குலதெய்வமாக விளங்கியிருக்கிறது.

அக்காள் - தம்பி பாசம் ஊடாடும் தனித்துவமானதொரு தலபுராணம், ஆதிகேசவப் பெருமாள் கோயிலின் பின்னணியில் மறைந்திருக்கிறது. முன்னொரு நாளில், இப்பகுதியை கேசன் என்கிற அரக்கன் இங்கே ஆட்சி புரிந்து வந்தான். அந்தணர்கள், பாமர மக்கள், பெண்கள் என எவரும் அவனது கொடுமைக் கண்களுக்கு தப்பவில்லை. அல்லலுற்ற மக்கள் அரியைத் தொழுதனர். மக்களின் கடும் தவத்துக்கு பலன் கிடைத்தது. அனந்தன் சகிதம் ஆதிமூலமாகிய நாராயணனும் அங்கே வந்து சேர்ந்தான். நாராயணனின் ஆணைப்படி, கேசனை ஆதிசேஸன் தன் உடலால் சுற்றி வளைத்து இறக்கி வதம் செய்தான். தன் உடலின் கீழே அரக்கனைப் புதைத்துவிட்டு, மேனியில் புனிதனைத் தாங்கிய வண்ணம் அங்கேயே நிலை பெற்றான்.

அரக்கன் கேசனுக்குக் கேசி என்று ஒரு அக்காள் இருந்தாள். அவள், தன் தம்பிக்கு நேர்ந்த கதி-யைக் கேள்விப்பட்டு, தாளாத சீற்றம் கொண்டாள். பரந்தாமனைப் பழி வாங்குவதற்காக, ஒரு பெரும் ஆறாக வடிவெடுத்தாள். பெருவெள்ளமாகப் பொங்கிப் பாம்பணையோடு பரந்தாமனை மூழ்கடிக்கப் பார்த்தாள். ஆனால், மனமிரங்கிய நாராயணனோ அவள் மீது கருணைகொண்டு, ஆழியை நோக்கி அவளது பாதையைத் திசை திருப்பினான். ஆயினும் கேசி கோபம் தணியாமல், ஆழி நோக்கிச் செல்லும் வழியில் ஆங்காங்கே நின்று, அரங்கனுடன் போர் புரிந்தாள். நாராயணனும் அவளை அங்கங்கே அடக்கி, ஆழியில் கொண்டு சேர்த்தான். இவ்வாறு அரங்கன், கேசியுடன் கேளிக்கையாகப் போர் புரிந்த காட்சியைக் கண்டு சிலிர்த்துப்போன ஈஸ்வரன், அரக்கியை வதம் செய்யாமல் ஆழியில் சேர்த்த நாராயணனின் கருணையைப் போற்றி வணங்கினான். கேசி பெருவெள்ளமாக வந்த ஆறுதான் பரலியாறு எனப்படுகிறது. அந்த ஆறு பரந்தாமனை வட்டமிட்டுச் சென்றதால் இத்தலமானது வட்டாறானது. கேசனை வதம் செய்த நாதன், ஆதிகேசவன் என்ற அரும்பெயரை அடைந்தான்.

சுற்றி ஓடும் பரலியாற்றின் நடுவே, பதினெட்டு படிகளின் மேல் அமைந்த பூமி அரங்கத்தில், மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் ஆதிகேசவப்பெருமாள் கோயில் அமைந்துள்ளது. கேரள பாணி கட்டிடக் கலையின் தலைசிறந்த உதாரணங்களில் ஒன்றாக இந்தக் கோயிலை சொல்லுகிறார்கள். சிறு குன்று ஒன்றை உள்ளடக்கி அமைக்கப்பட்டதனால் உயரமான அடித்தளம் கொண்டிருக்கிறது. நான்கு பக்கமும் நாலம்பல முகடுகள் செம்பு வேயப்பட்ட கூம்புவடிவ கருவறை விரிந்த சுற்றுப் பிராகாரம் சரிவான கூரை கொண்ட கோபுரம் உள்ளே நுழைந்தவுடன் இருபுறங்களிலும் விசாலமான திண்ணைகள் கொடி மரம் பலி பீடம் என கேரள பாணியில் அமைந்துள்ளது இக்கோயில்.

திருவாங்கூர் சமஸ்தானத்தை ஆண்ட உதய மார்த்தாண்டனின் பெயரில் விளங்கும் இங்குள்ள மண்டபம் சிற்பக் கலை வேலைப்பாடுகள் மற்றும் நுட்பமான ஓவியத்திறனுக்கு மிகவும் பிரசித்தி பெற்றது. நாற்புறமும் கருங்கல்லால் ஆன 250 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்ட சுற்றுப் பிராகார மண்டபத்தின் 224 தூண்களிலும் விளக்கு ஏந்திய பாவைகள் மற்றும் தீப லட்சுமிகளின் பொலிவான சிற்பங்கள் உள்ளன. மிக நுட்பமான வேலைப்பாடுகள் கொண்டவை இச்சிற்பங்கள். சற்று மென்மையான மணல்கல்லில் செதுக்கபப்பட்டவை. நூற்றுக்கணக்கான சிற்பங்களில் ஒரு சிற்பத்தின் காதணி, கழுத்தணி, தலையலங்காரம் எதுவும் இன்னொரு சிற்பத்தில் இருக்காது என்பது இதன் சிறப்புக்கு முக்கிய காரணம். இங்குள்ள மரச் சிற்பங்களும் மரச்சிற்பங்கள் மிக நுட்பமானவையும் அபூர்வமானவையுமாகும். அற்புதமானவையும்கூட. முகமண்டபத்தில் உள்ள அர்ஜுனன், கர்ணன், கங்காளர், கோபாலகிருஷ்ணன் சிலைகள் மிக அபூர்வமான சிற்ப நுட்பங்களுடன் உள்ளன. கணபதியின் திருமண ஊர்வலக் காட்சியைக் கண் முன் கொண்டு வந்து நிறுத்தும் சிற்பக் கூட்டணியும் சிவதாண்டவச் சிற்பமும் நம்மை தூர விலக அனுமதிக்காது. எல்லாம் சேர்ந்து நம்மைப் பிரமிப்பின் எல்லைக்கே அழைத்துச் செல்கின்றன. அத்துடன் நிற்கவில்லை. கருவறை மண்டபத்துக்கு முன்னால் இருக்கும் பலி பீட மண்டபத் தூண்களிலும் கற்சிற்பங்கள். அன்னப் பறவையின் மேல் ஆரோகணித்திருக்கும் ரதிதேவி, கரும்பு வில்லும், மலர்க் கணையும் ஏந்தி நிற்கும் மன்மதன், லஷ்மணன், இந்திரஜித், வேணுகோபால், சக்தி, நடராஜர், பிரம்மா, விஷ்ணு, நாகராஜன் ஆகிய சிற்பங்கள் வாழ்நாள்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

**வழிப்போக்கன்**

### எப்போது செல்வது, எப்படி செல்வது? எங்கே தங்குவது?

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் இருந்து கேரள தலைநகரமான திருவனந்தபுரம் செல்லும் வழியில் இருக்கிறது, திருவட்டாறு. சென்னையில் இருந்து திருவனந்தபுரம் செல்லும் ரயிலில் ஏறி, நாகர்கோவிலை அடுத்து வரும் குழித்துறை ரயில் நிலையத்தில் இறங்கினால், அங்கிருந்து 6 கி.மீ. தூரத்தில் திருவட்டாறு வரும். பேரூந்து வசதி உள்ளது. ஆட்டோவிலும் செல்லலாம். சென்னையில் இருந்து நாகர்கோவிலுக்கு தினமும் ரயிலுடன் பேரூந்து போக்குவரத்தும் அதிகம் உள்ளது. எனவே, நாகர்கோவிலில் இருந்து திருவனந்தபுரம் சாலையில் பேரூந்தில் பயணப்பட்டால், 23 கி.மீ. தூரத்தில் இருக்கும் அழகிய மண்டபத்தில் இறங்கி, அங்கிருந்து 7கி.மீ. தூரத்தில் இருக்கும் திருவட்டாறுக்குப் பேரூந்து அல்லது ஆட்டோ, கார் மூலம் செல்லலாம். திருவட்டாறு மிகச் சிறிய ஊர் என்பதால், தங்கும் விடுதிகள் இல்லை. நாகர்கோவிலில் வசதியான தங்கும் விடுதி, மற்றும் உணவு விடுதிகளும் உள்ளன. எனவே, நாகர்கோவிலில் தங்கி வரலாம் அல்லது திருவனந்தபுரத்தில் இருந்தும் வரலாம். தரிசன நேரம்: காலையில் 5.00 மணி முதல் பகல் 12.00 மணி வரை மாலையில் 5.00 முதல் இரவு 8.00 மணி வரை!




# அமரர் முருகுப்பிள்ளை பாஸ்கரநாதன்



தோற்றம்: பெப்ரவரி 17, 1958 மறைவு: ஜனவரி 9, 2009

எளிமையான சிந்தையும் எல்லோர்க்கும் உதவ வேண்டும் என்னும் சீரிய மனப்பாங்கும் கொண்ட அன்பனே, எம்மோடு சேர்ந்து தோளோடு தோள் நின்று நீ ஆற்றிய அரிய சேவைகள் எம் கண் முன்னே நிழாலாடுகின்றது. 1979 இல் பல்கலைக் கழகத்திற் சந்தித்த நாள் முதலாய் ஒன்றாகக் செய்த குறும்புகள் அத்தனையையும் மறக்க முடியாது; உன் குறும்புப் புன்னகையையும் மறக்க முடியாது. ஆண்டு தோறும் எமது ஒன்று கூடல்களுக்குத் தவறாமற் குடும்ப சகிதம் வந்து எம்மோடு மனம் கலந்து பேசிப் பழகி மகிழ்வாயே, பண்புள்ளம் கொண்ட நண்பா, உன்னை எப்படி இழந்தோம் என்று புரியாது தவிக்கிறோம்.

-உன் பிரிவாற் கலங்கி நிற்கும் சக பொறியியல் மாணவர்கள் -

# அழிபசி

உயிர்களின் பண்பு, நலன்கள் எல்லாவற்றையும் அழிக்கும் நோயாதலால் பசியை, அழிபசி என்றனர் போலும் வள்ளுவர்.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப்புழி. என்பது குறள்.

ஒருவன் தனது பணத்தை சேர்த்து வைக்கும் இடம் ஏழை மக்களின் பசித்த வயிறேயாகும் என்பது மேலுள்ள குறளின் பொருளாகும்

பசி ஒருவனது குடிப்பிறப்பின் பெருமையினை அழிக்கும். உயர் பண்புகளை மாய்க்கும். கல்வி எண்ணும் புணையை அகற்றும்; நாண் என்னும் அணிகலத்தைக் களையும், எழிலைச்சிதைக்கும்; மனைவி மக்களொடு பிறரது வாயிலில், தெருவில் பிச்சை எடுப்பதற்காக கொண்டு போய் நிறுத்தும். பின்வரும் மணிமேகலை காப்பிய அடிகள் இதனை விளக்கும் வகையில் உள்ளன.

குடிப்பிறப் பழிக்கும் விருப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடுஉம்
நாண் அணிகளையும் மாண் எழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பூண்பிணி என்றும் பாவி

மேலும் பத்து நலன்களையும் பாழ்படுத்தி, சித்தத்தை கலங்க வைத்து, உத்வேகத்தை குறைத்து, கத்திக் கலங்க வைத்திடும், பசி எனும் பாவி.

மானம் குலம் கல்வி வண்மை அறிவுடமை
தானம் தவம் தயவுடமை தாளாண்மை
கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திடம் பறந்து போம்.

உலகில் பிறந்து உயிர்வாழும் ஒவ்வொரு உயிர்க்கும் பொதுவாய் அமைந்தது பசி. அப்பசியைத் தீர்ப்பது உணவு. உணவை முதன்மையாகக் கொண்டே உலக வாழ்க்கை நடைபெறுகின்றது. உணவு மனிதனின் தேவைகளில் முதன்மையானது.

நீரினற்மையா யாக்கைக்கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே



உண்டிமுதற்றே உணவின் பிண்டம்
என்ற குடபுலவியனார் பாடல் இதனை உணர்த்துகின்றது.

பசியின் கொடுமை பெரிது. உலகில் உள்ள எல்லாப்பிணிகளிலும் கொடியது பசிப்பிணிதான். பசிப் பிணியினின்றும் நீங்கி வாழ்வதற்கே உலகில் எல்லாச் செயல்களும் நடைபெறுகின்றன. ஓடி ஓடி உழைப்பதெல்லாம் வயிற்றை நிரப்புதற்கேதான். எண்சான் உடம்பிற்கு வயிறே பிரதானம் என்றால் மிகையில்லை.

சேவித்தும் சென்றிரந்தும் தண்ணீர்க்கடல் கடந்து
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நளம் -

என்ற பாடல் இதனை புலப்படுத்துகின்றது. பசிப்பிணியின் கொடுமையைத் தணிக்க ஒருபடி அரிக்காக மக்கள்படும் அலைச்சலை இப்பாடல் அழகுறச் சித்தரிக்கின்றது. இன்றைய நிலையில் அரிசி விலையின் அதிகரிப்பால் அவலம் அதிகரித்துள்ளது.

எவன் ஒருவன் ஏழை மக்களின் பசியை தீர்க்கின்றானோ அவனை பசி என்னும் கொடிய நோய் தீண்டுவதில்லை. அவன் பசியால் என்றும் வாடும் நிலை ஏற்படாது என்கின்றார் வள்ளுவர்.

பாத்தூண் மரீ இயவனைப் பசி என்னும்
தீப்பிணி தீண்டல் அரிது

வறியவரின் பசிப்பிணியைத் தீர்ப்பதே வாழ்வின் குறிக்கோளாக இருக்க வேண்டும். இதற்காகத்தான் முன்னர் தருமச் சாலைகள் அமைக்கப்பட்டன. இன்றும் ஆலயங்களில் அன்னதானம் நடைபெறுகின்றது.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை

என்பது வள்ளுவர் வாக்கு

பகுத்துண்ணலையே பண்டைய அருளாளர் வலியுறுத்தியுள்ளனர். பகுத்துண்ணல் என்ற அறம் மாத்திரமன்றி ஏழைகளாலும் செய்யத்தக்கது என்பது திருமூலர் கருத்து.

யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்கருமாம் உண்ணும் போது ஒருகைப்பிடி

இறைவனின் இருப்பிடங்களான சிவதேசங்கள் என்ற ஆலயங்கள் பசியினால் பாழாக்கும் தருணத்தில் ஆகாரம் கொடுத்தது .அவ்வாலாயங்களை விளங்கச் செய்வதே சிவகாருண்யமாகும். பசிப்பிணியை போக்குபவன் பசிப்பிணி மருத்துவர் எனப்படுகின்றனர். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தவராவர் என்பதில் அவர் மகத்துவம் விளக்குகின்றது. உணவின்மையாலும் போசாக்கின்மையாலும் உலகில் நாளாந்தம் மக்கள் பலர் மடிந்து கொண்டேயிருக்கிறார்கள். செல்வந்த நாடுகளில் உணவு வீணே கொட்டப்படுகின்றது. ஆனால் வறிய நாடுகளில் ஒருவேளை உணவுக்கே மக்கள் அங்கலாய்க்கும் நிலை உள்ளது. உலக உணவு ஸ்தாபனம் கூட ஏழைமக்களின் இன்னல் போக்குவதற்கு முழுமையாக கைகொடுத்து உதவுவதில்லை. மணிமேகலை காப்பியத்தில் கூறப்பட்டது போன்ற அட்சயபாத்திரத்திரம் ஒருவர் கையில் அகப்பட்டால் அனாதை மக்களுக்கு அது அளப்பரிய நன்மை செய்யும் என்பது விளங்கும். ஒரு வரப்பிரசாதமாகவும் அமையும்.

வெயிலேறிப் போகின்றதே பசி வந்து வாட்டப் போகின்றதே என்ற பரிதவிப்பு ஏழைச் சிறுவர் மனங்களிலே ஏக்கத்தையே உண்டுபண்ணும். தவவலிமை உடையவர் பசியைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் சாதாரணமக்கள் அதற்கு அடிமைகளே. பசிக்கும் போது கல்லைத்தான் மண்ணைத் தான் காட்ட முடியுமா? கூழோ, கஞ்சியோ குடிக்கக் கொடுத்தாகவே வேண்டும். பாலுக்கு சர்க்கரை இல்லை என்று கவல்கின்றனர் ஒருபுறம். பசித்த வயிற்றுக்கு கஞ்சியில்லையே என்று கவலைப்படுவோர் ஒருபுறம்.

வயிற்றுப்பசி, அறிவுப்பசி, ஆன்மீகப்பசி, அதிகாரப்பசி, காமப்பசி என்று பசியின் ரூபங்கள் பல. எனினும் எந்தப்பசியாயினும் அதுஅளவோடு இருந்தால் ஆனந்தமே.



நா. க. சிவராமலிங்கம்

# சேர நாட்டு ஸ்ரீரங்கம்..

12ஆம் பக்கத்தொடர்ச்சி

முழுவதும் மறக்க இயலா வனப்பைக் கொண்டிருக்கின்றன. இங்குள்ள சிற்பங்களின் மொத்த எண்ணிக்கை 2,300 மேல்! அனைத்தும் வண்ணங்களுடன் எழிலுறக் காட்சியளிக்கின்றன. எல்லா சிற்பங்களும் கேரள பாணிக் கருவறை கோபுரத்துச் சிற்பங்கள்.

சிற்பங்களுக்கு அடுத்தபடியாக நம் மனதைக் கவர்பவை, கருவறையைச் சுற்றி சுவர் முழுக்கக் காணப்படும் பல வண்ணப் பச்சிலை



ஓவியங்கள்தான். எழிலுறத் தீட்டப்பட்டுள்ள இந்த ஓவியங்கள் காலத்தாலும் இயற்கைச் சீற்றங்களாலும் தாக்கப்பட்டு, மங்கியும் சிதைந்தும் காணப்படுகின்றன. என்றாலும் அவற்றின் வசீகரம் குறையவில்லை என்பதுதான் சிறப்பு.

மேற்கு பார்த்த கருவறையில், 22 அடி நீள ஆதிகேசவப் பெருமாள் பள்ளிகொண்டு இருக்கிறார். மூன்று வாசல்களின் வாசல் வழியே பெருமாளின் திருமேனி தரிசனம் கிடைக்கிறது.

பெருமாளின் தலை பக்கத்தில் ஐந்து தலை நாகம் குடையாக விரிந்திருக்கிறது. இந்தியாவில் உள்ள புகழ்பெற்ற எல்லா பெருமாள் சிலைகளையும் கண்டவர்கள் ஆதிகேசவப் பெருமாள் அளவுக்கு பேரழகு கொண்ட சிலை எங்குமில்லை எனப் புகழ்கிறார்கள். பெருமாளின் அருகில் ஸ்ரீதேவி, பூதேவி அமரும் கதலேயே முனிவர்! பெருமாளின் வலக்கை சின் முத்திரை கொண்டு துலங்குகிறது. அவரது திருப்பாதங்களின் அருகில் சிவலிங்கம் இருக்கிறது.



இயற்கை சீற்றங்களுடன் படையெடுத்து வந்த எதிரி நாட்டு மன்னர்களாலும் இக்கோயிலின் அழகிய சிற்பங்களும் ஓவியங்களும் சிதைவுக்குள்ளாகி இருக்கின்றன. கி.பி. 1740-ம் ஆண்டு, ஆற்காடு நவாப் திருவட்டாறு மீது படையெடுத்து வந்தபோது, ஆலயத்து உற்சவரின் தங்க விக்கிரகத்தைக் கவர்ந்து சென்றிருக்கிறார். ஆனால், அன்றிலிருந்து நவாப் அவ்வப்போது ஏதாவதொரு உடல் நலக் கோளாறால் அவதிப்பட்டு இருக்கிறார். அனுபவம் வாய்ந்த பெரியோர்களின் அறிவுறுத்தலின்படி, தான் கவர்ந்து சென்ற உற்சவ மூர்த்தியைத் திரும்பக் கொண்டுவந்து வைத்திருக்கிறார் நவாப். அதுமட்டுமல்லாது, அல்லா மண்டபம் என்றொரு மண்டபத்தைக் கட்டுவித்து, ஆண்டுதோறும் அதில் பூஜைகள் நடத்த மானியமும் வழங்கியிருக்கிறார். இந்த மண்டபம், கருவறையை வலம் வரும்போது உட்பிரகார நடையில் காணப்படுகிறது.

தீய சக்திகளைத் தன் பாம்பணையில் அழுத்திவைத்துக் கொண்டு, மேலே எழுந்து விடாதவாறு பள்ளிகொண்டு உலகை உய்வித்துவரும் ஆதிகேசவப்பெருமாளை வழிபடுபவர்களுக்குத் தீராத நோய்கள் அனைத்தும் தீருகின்றன. தொலையாத துன்பங்கள் அனைத்தும் தொலைகின்றன என்பது நம்பிக்கை!

# " HALL OF FAME" ....

06ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆட்டக்காரராக களமிறங்கிய வார்னர் அதிரடியாக எடுத்த 89 ஓட்டங்கள் தான் காரணம். 132 ஆண்டு அவுஸ்திரேலிய கிரிக்கெட் வரலாற்றில் முதல்தர வார்னர் தான் காரணம். 132 ஆண்டு அவுஸ்திரேலிய கிரிக்கெட் வரலாற்றில் முதல்தர போட்டிகளில் பங்கேற்காமல் நேரடியாக தேசிய அணியில் பங்கேற்ற முதல் வீரர் வார்னர் தான். இவர் இன்று நடக்க இருக்கும் இரண்டாவது 'ருவெண்ரி - 20' போட்டியில் மட்டும் விளையாடுகிறார். ஒரு நாள் அணியில் வார்னர் தேர்வு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் வார்னரின் ஆட்டத்தை அணித்தலைவர் பாண்டிங் பாராட்டியுள்ளார்.

இதுகுறித்து பாண்டிங் கூறுகையில் - அதிரடி துவக்க ஆட்டக்காரர் கில்கிறிஸ்ட் அணியில் இருந்து ஓய்வு பெற்று விட்டார். ஆனால் புதிய "கில்லியாக" வார்னர் உருவெடுத்து இருக்கிறார். பிரிஸ்பேன் போட்டியிலும் வார்னர் அசத்துவார் என நினைக்கிறேன். வார்னர் அணியின் புள்ளிவிபரத்தை அதிகரிக்க முடிவு செய்து விட்டார் பிறகு தடுப்பது கடினம்' என்றார்.

2வது 'ருவெண்ரி - 20' அவுஸ்திரேலியா, தென்ஆபிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது 'ருவெண்ரி - 20' போட்டி இன்று பிரிஸ் பேனில் துவங்குகிறது. முதல் ஆட்டத்தில் தோல்வியடைந்து இருந்த தென்ஆபிரிக்கா இந்த போட்டியில் வென்று 'ருவெண்ரி - 20' தொடரை சமன் செய்ய முயற்சிக்கும். ரெஸ்ற் தொடரை இழந்த அவுஸ்திரேலியா இன்றைய ஆட்டத்தில் வென்று தொடரை

வெல்ல கடினமாக போராடும்.

# தவறான கணிப்பீடு

## ஓடும் நீர் உறைவதில்லை 77

மனிதனால் பிறந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு கணமும் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்பதை அடிப்படையாக வைத்தே நமது எந்தவொரு நடவடிக்கையை நாம் மேற்கொள்ளும்போது அதன் பெறுபேறுகள் நமக்குக் சாதகமானதாக அமைய வேண்டும் என்பதே நமது அடிப்படை எதிர்பார்ப்பாக அமைகின்றது. இந்த எதிர்பார்ப்பானது எந்தவகையான முயற்சி என்ற வேறுபாட்டைக் கொடுப்பதில்லை. ஒரு வைத்தியரின் சத்திரசிகிச்சை, ஒரு சட்டத்தரணியின் வாடிக்கையாளர் சார்ந்த வெற்றி ஒரு விவசாயியின் சிறப்பான அறுவடை என ஒவ்வொரு முயற்சியாளனதும் எதிர்பார்ப்பு தனக்கு மகிழ்ச்சி தருவதாக அமைய வேண்டும் என்பதே.

ஒருவரது எதிர்பார்ப்புக்கள் இன்னொருவரது எதிர்பார்ப்பில் இருந்து வேறுபட்டாலும் இறுதி விளைவு தமக்குச் சாதகமாக அமைய வேண்டும் என்பது பொதுவானதாக அமைகின்றது. ஆனால் இந்த இறுதிவிளைவை பற்றிய ஒருவரது உறுதிப் தன்மையை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஒரு செயலைச் செய்வது நமது பொறுப்பாக இருப்பினும் அதன் விளைவுகள் நமக்கு உரிமை இல்லை என்பது நமக்குப் புரிந்தாலும் சரி புரியாவிட்டாலும் சரி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே. இங்கு ஒரு செயலின் ஆரம்பகர்த்தாவாகவும் அதனை நடைமுறைப்படுத்துவதில் நாம் முற்றுமுழுதாக ஈடுபடுபவராகவும் இருக்கும் போது அதன் பெறுபேறுகளை உரிமையுடன் எதிர்பார்ப்பது அல்லது உரிமை கொள்வதில் தவறு இல்லையே என்ற வினாவும் எழுவது நியாயமானதே. அப்படியானால் 'கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே' என்பதன் விளக்கம் என்ன? ஒரு செயலின் ஆரம்பமானது அந்தச் செயலால் பெறப்படும் முடிவை அடிப்படையாக வைத்தே ஆரம்பிக்கப்படுவதால் பலரை எதிர்பார்க்காமல் எப்படி ஒரு செயலை ஆரம்பிக்க முடியும் என்பதும் நியாயமான கேள்வியே. அப்படியானால் பலனை எதிர்பாராமல் செயற்படு என்பதன் அர்த்தம் தான் என்ன? எதற்காக இந்தக் கூற்று அதிசக்தி வாய்ந்ததாயும் ஒரு சிலரால் மட்டும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் அதிபெரும்பான்மையானவர்களினால் வாழ்வியலின் முக்கிய பகுதியாக இல்லாமல் வார்த்தைப் பிரயோகமாக மட்டும் இருப்பது ஏன்? பலனை எதிர்பாராது தமது கடமையைப் பூரணமாகச் செய்பவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள் என்பதும் மறுக்கமுடியாத தாயினும் அவர்கள் அறிந்துள்ள ஆனால் நம்மால் அறியப்படாத விடயம்தான் என்ன?

முதலில் பலனை எதிர்பாரது கடமையை மட்டும் செய்வதனால் மகிழ்ச்சி ஏற்படுத்துவற்கான காரணங்களைப் பார்ப்போம். ஒரு முயற்சியானது அதன் முடிவை முன்வைத்து ஆரம்பிக்கப்படுகின்றது என்பது அடிப்படை யானது. ஏனெனில் முடிவே ஒன்றின் ஆரம்பமாக அமைகின்றது. எனவே முடிவு ஒன்றை எதிர்பாராமல் ஒன்றை நாம் ஆரம்பிப்பது முடியாத காரியமே. ஏனெனில் ஒரு குறிக்கோள் அல்லது இலக்கு என்பது ஒன்றின் ஆரம்பத்திற்கான அத்திவாரமாக அமைய வேண்டியதாகின்றது. அப்படியாயின் பலனை எதிர்பாராமல் எப்படி ஒன்றை ஆரம்பிப்பது என்ற கேள்வி நியாயமானதே. இங்கே இந்தப் 'பலன்' என்பது பற்றிய சிறிய விளக்கம் அவசியமாகின்றது. ஒரு செயலின் பலன் என்பது அந்தச் செயலின் அடிப்படைத் தன்மையின் இறுதி விளைவு மட்டுமே. எனவே செயல் எதுவானாலும் விளைவு ஒன்று நிச்சயமாக இருக்கும் என்பது உறுதியானதே.

KG Master-kgmaster@rogers.com

இப்போது ஒரு உண்மையை நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும். ஒரு செயலின் தன்மையைப் பொறுத்து அதன் விளைவு இடம்பெறுவதால் எதிர்பார்க்கப்படும் விளைவு என்பது நாமாக மேற்கொள்ளும் ஒரு கணிப்பீடாக மட்டுமே அமைகின்றது. ஏனெனில் செயலின் தரம் அதன் தாக்கம் என்பன எவ்வளவு தூரம் அது சார்ந்துள்ள விடயங்களில் தனது செல்வாக்கைச் செலுத்துகின்றது என்பதும் அந்தச் செல்வாக்கின் மூலம் அதுசார்ந்த விடயங்களில் ஏற்படும் மாற்றங்களும் அவை எவ்வளவு தூரம் சாதகமான அல்லது பாதகமான வெளிப்பாடுகளைக் கொண்டுவரும் என்பதும் ஒரு மதிப்பீடு சார்ந்த எதிர்பார்ப்பு மட்டுமே. உதாரணமாக ஒரு விவசாயியின் செயற்பாடுகளை நாம் முன்னிறுத்துவோமாயின் அவரது செயற்பாடுகள் ஒரு பயிரின் விதையினை விதைப்பதில் ஆரம்பித்து அதன் அறுவடைவரை நகர்கின்றது. இங்கு ஒரு விதையின் தரம், அதை விதைத்த பின்னர் மேற்கொள்ளும் தொடர் நடவடிக்கைகள் என்பன செயற்பாட்டின் படிமுறைகளாக அமைகின்றனவேயன்றி அதன் விளைவுகளை அதாவது பலன்களை இவ்வளவு என்று நிச்சயப்படுத்துபவையல்ல. ஒரு மாங்காய் விதையிலிருந்து எத்தனை மாங்காய்கள் என்றோ ஒரு அப்பிள் விதையிலிருந்து எத்தனை அப்பிள்கள் என்றோ எவராலும் திட்டவட்டமாகக் கணிப்பிடல் முடியாத காரியமாகும். இதனால்தான் ஒரு முயற்சியில் அல்லது செயற்பாட்டின் ஒழுங்குமுறைகள் முக்கியத்துவம் பெறப்படவேண்டுமேயன்றி அதன் விளைவுகளில் திட்டவட்டமான கணிப்பீடுகளை மேற்கொள்ளல் பொருத்தமற்றதாக அமைகின்றது.

நாம் சில தவறான கற்பிதங்களால் நமது கடமையின் பலனை எதிர்பார்ப்பதற்குப் பழக்கப்பட்டு விடுகிறோம். பத்தாயிரம் டொலர்களை பத்துவீத தனிவட்டிக்குப் பத்து வருடங்களில் முதலீடு செய்தால் பத்து வருடங்களல் முதலும் வட்டியுமாக இருப்பதினாயிரம் டொலர்கள் இருக்கும் எனப் பாடசாலையில் கற்றது போன்றே நமது நடவடிக்கைகளின் முயற்சிகளில், கடமைகளின் பெறுபேறுகள் அமைய வேண்டும் என நாம் எதிர்பார்க்கப்பழக்கப்பட்டு விடுகிறோம். ஆனால் ஒரு முக்கியமான உண்மையை நாம் உணர்ந்து கொண்டால் இந்த எதிர்பார்ப்புக்களின் சங்கடங்களுக்குள் அகப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். அதாவது எதை விதைக்கிறோமோ அதை அறுக்கிறோம் என்பது மட்டுமே. எவ்வளவு அறுவடை செய்கிறோம் என்பது எமது கையில் இல்லை. உதாரணமாக மாவிதையை விதைப்பதால் மாம்பழத்தைப் பெறுவது சாத்தியமாகலாம். ஆனால் எத்தனை மாம்பழங்கள் என்பது எமது கையில் இல்லையல்லவா! இதனால்தான் ஒரு மாவிதையை விதைத்து, பராமரிப்பது எமது செயற்பாடாக இருக்குவேண்டுமேயன்றி மாவிதையை விதைக்கும் போதே இது ஆயிரம் மாம்பழங்களைத் தரும் என்ற எதிர்பார்ப்புடன் விதைப்பதும் பராமரிப்பதும் பொருத்தமற்றதாகி விடுகிறது. ஏனெனில் அதன் பலாபலன்கள் அல்லது விளைவுகளை கட்டுப்படுத்தும் தகுதி நம்மிடம் இல்லை. விளைவை அல்லது பலனைக் கட்டுப்படுத்தும் தகுதி நம்மிடம் இல்லாதிருப்பதால் ஒரு செயலை நாம் செய்யும் போது அந்தச் செயலைச் செயலுக்காகச் செய்ய வேண்டுமேயன்றி அதன் விளைவுக்காகச் செய்யக்கூடாது என்பது நாம் மறுக்க முடியாத தாகின்றது. ஒரு செயல் சிறந்ததாக அமையும்போது அதன் விளைவும் சிறப்பான தாகவே அமையும். ஆனால் எவ்வளவு என்பது நம்மால் அளவிடப்பட முடியாதிருப்பதால் அதை எதிர்பாரது செயலில் ஈடுபடுவது சிறந்ததாகும். உதாரணமாக ஒரு விவசாயி நெல்லை விதைக்கும்போது விதைக்கப்பட்ட நெல்லில் இருந்து புல் ஒருபோதும் முளைப்பதில்லை. ஆனால் எவ்வளவு நெல் விளைவாக வரும் என்பது அந்த விவசாயியின் கட்டுப்பாட்டில் இல்லை. இதனால் தான் செயலை மட்டும் முதன்மைப்படுத்தி நாம் செயற்படும்போது அதன் விளைவு எந்த அளவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் நமக்கு மகிழ்ச்சியைத் தருவதாக அமையும்.

பலனை எதிர்பாராமல் நாம் செயற்படவேண்டும் என்பதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. ஒரு முயற்சியை நாம் மேற்கொள்ளும் பொழுது அதன் முழு உரிமையையும் நாம் சொந்தமாக்கும் சுயநலத் தன்மையைக் கொண்டிருப்பதை நாம் உணர்ந்து கொள்வ தில்லை. ஒரு செயலின் நடைமுறைப் படுத்தலுக்கு எண்ணிலடங்காத காரணிகளும் எமது முயற்சிக்குப் பங்களிப்புச் செய்கின்றன என்பதை நாம் உணர்வதில்லை. உதாரணமாக ஒரு நாளைக்கு நாம் வேலைக்குச் சென்று நூறு டொலர்களை உழைக்கிறோம் என்றால் நாம் உறக்கத்தில் இருந்து எழுவது முதல், ஒவ்வொரு நடவடிக்கையும் பல்வேறு புறக்காரணிகளின் அதிகளவான பங்களிப்பினால் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன. நமது காலை உணவு வீதிப்போக்குவரத்து, கால நிலை, நமது சூழலின் சாதகமான தன்மை வேலை செய்யும் இடத்தின் சூழல், வீடு திரும்பும்போது தேவைப்படுகின்ற மனிதனதும், இயற்கையினதும் பங்களிப்புகள் என வரையறையற்ற காரணிகள் எமது முயற்சியுடன் இணைக்கப்படுகின்றன. இவ்வாறான காரணி களின் பங்களிப்பு இன்றி நம்மால் எதுவுமே செய்யமுடியாமல் போய்விடும். ஆனால் இவற்றின் பங்களிப்புப்பற்றிய கணிப்பீடு அல்லது உள்ளுணர்வு நமது கவனத்தில் எடுக்கப் படுவதில்லை. ஏன் நாம் உயிர்வாழ்வதால்தான் நமது நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிகிறதே என்ற எண்ணம் கூட நமக்கு ஏற்படுவதில்லை. நம்மில் எத்தனைபேர் நாம் விடும் மூச்சைப்பற்றிக் கவனத்தைச் செலுத்துகிறோம்? மூச்சு இல்லாவிடின் எதுவுமே இல்லை என்பதைக் கூட நாம் உணருவதில்லை. ஏனெனில் அதன் பங்களிப்பின் மகத்துவம் இயற்கையின் இலவசமான பெருங்கொடையாக இருப்பதால் அதன் பெறுமதியை நாம் உணருவ தில்லை. நமது மூச்சின் பெறுமதியையே அறிய முடியாத நமக்கு மற்றைய காரணிகளின் பங்களிப்புப் பற்றிய உணர்வு இல்லாமல் இருப்பது ஆச்சிரியத்துக்குரிய தல்ல.

செயலைச் செய்வது தான் நமது கடமை. பலனை எதிர்பாராதே என்பது நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டிய விடயமாகும். இதை இன்னொருவகையில் கூறுவதாயின் கடமையைச் செய்ய வேண்டிய பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆனால் அதன் பலனில் உரிமை கிடையாது என்பதாகும். இந்த உரிமை பற்றிய தெளிவின்மையே நமது துன்பங்களுக்கும் கவலைகளுக்கும் அடித்தள மாகின்றது. ஏனெனில் ஒரு செயலின் செயற்பாட்டிற்குப் புறக்காரணிகள் எவ்வளவு தூரம் நமக்கு ஒத்துழைப்புத் தருகின்றன என்பதை உணராமல் அந்தச் செயற்பாட்டின் முழு உரிமையையும் நமதாக்கிக் கொள்வதால் அதன் விளைவு மீதும் முழு உரிமை கொண்டாடு கிறோம். இதில் மிகவும் வேடிக்கையான விடயம் என்னவென்றால் முயற்சி ஒன்றின் பலன் சாதகமானதாக அமையும்போது அதை முற்றுமுழுதாக உரிமை கொள்ளவும் பாதகமாக அமையும் போது அதை முற்றுமுழுதாகப் புறக்கணிக்கவும் முனைகின்றோம்.

ஆம் வாசகர்களே!

ஒரு செயலின் செயற்பாட்டிற்குரிய நமது பங்களிப்பானது மிகச் சிறியதாயும் இயற்கையினதும் சூழலினதும் பங்களிப்புகள் மிக அதிகமாகவும் இருப்பதால் அந்தச் செயலின் விளைவுகள் அல்லது பெறுபேறுகள் எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாக அமைகின்றன. இதனால் விளைவுகள் பற்றிய முற்கூட்டிய எதிர்பார்ப்புக்கள் பெரும்பாலும் நமது கணிப்பீட்டிற்குப் பொருத்தமற்றதாக அமைந்து விடுகின்றன. இந்தவகையான எதிர்பார்ப்புக்கள் ஒரு செயலின் ஒட்டு மொத்தப்பங்களிப்பில் எமது பங்களிப்பின் அளவு பற்றிய தவறான கணிப்பீடாகும். இந்தத் தவறான கணிப்பீடே எமக்கு ஏமாற்றம் துக்கம் விரக்கதி போன்றவற்றின் ஆதிக்கத்துக்குள் எம்மை இட்டுச் செல்கின்றது. எனவே மனிதன் என்ற வகையில் நம் ஒவ்வொருவருக்கும் உள்ள கடமையைச் சரிவரச் செய்வோம். நமது கடமையை நாம் சரிவரச் செய்வோமாக இருந்தால் அதன் விளைவு எப்பொழுதும் நன்மையானதாகவே அமையும். ஆனால் அந்த நன்மையின் உரிமையாளர்கள் யார் என்பது பற்றிய ஆய்வு இல்லாத செயற்பாடே சிறந்த செயற்பாடாகும். எனவே நன்றே செய்வோம். அதை இன்றே செய்வோம். அதையும் எந்தப் பிரதிபலனும் எதிர்பாராமல் செய்வோம். ஏனெனில் அந்தப் பலனைப் பெறுவதற்கான முயற்சியில் எமது பங்களிப்பு எவ்வளவு என்பது நம்மால் ஒருபொழுதும் கணிப்பிடப்படமுடியாததாக இருப்பதாகும்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*நன்றியுடன் KG Master*


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3223 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

**மஹராஜியின் உரைகள்**



**On DVD**

இலவச DVDக்கு அழையுங்கள்

(416) 431-5000

1 877 707 3223

**On TV**

Saturdays at 10:30 am

Rogers Cable Channel - 20

Bell Express vu Channel - 219

# HOMELIFE/GTA Realty Inc., Brokerage*



**Seelan Siva Aiyadurai**
Real Estate Broker
Direct: 416-451-0271
Email:seelansiva@gmail.com
Web:www.sivahomes.com

**Uthayan Aiyadurai**
Sales Representaive
Direct: 416-999-3555
Email:aiya14@gmail.com



*"THANK YOU FOR YOUR SUCCESSFUL REFERRALS"*

**IF YOU BUY, SELL OR INVEST IN ANY RESIDENTIAL OR COMMERCIAL PROPERTIES FROM ME**

## HERE IS YOUR CHANCE TO WIN







$354,900




**Bovaird/Hwy 7**
Well Maintained, Full Brick
4 Br Detached, Lovely Open Concept
Minute Walk To Catholic And Public
Schools, Good Location

$149,900




**Morningside/Ellesmere**
Very Good Location
2 Bedrooms, Luxury Mapledale Condo,
Bright And Spacious Corner Unit,
Close To All Amenities

$135,000



**Neilson/Mclevin**
2 Bedroom Condominium
corner Unit, 24 Hr Security
One Parking Space , Good Location

$49,900

Sale of Business



**Birchmount/Lawrence**
Auto Parts Wholesale/Retail Business
Well Maintained High Ceiling Warehouse
Industrial/Commercial Unit

$269,900



**Kennedy/Dennsion**
Well Maintained New Condo
2 +1 Bedroom Condominium
2 full Washrooms,Beautiful Lay Out
Parking Spaces , Good Location,
All Brand New appliances

$49,900



**Markham/Eglinton**
Nicely Setup Take Out/ Restaurant In
Busy Location, All Chattels, Equipment
In Good Condition, Monthly Rental $1990 Plus
Utilities For First Year

$208,900



**Mccowan/401**
Very Good Location
2 Bedrooms, Built by Tridel
Prestigious Neighborhood, Two Separate
4Pc Washrooms, 2 Car Parkings
Close To All Amenities

$218,900



**Kenney/St Clair**
3 Bedrooms Condominium, 2 Washrooms
Town House Prime Location With
Easy Access To T.T.C, Good Location

$239,000



**Thickson Rd/Dryden Blvd**
Well Maintained
3 +1 Bedroom Semi-Detached
3 Washrooms, Beautiful Lay Out,
Good Location

$249,900



**Birchmount/Ellesmere**
Well Maintained New Condo
2 Bedrooms Condominium
2 full Washrooms,Luxury Tridel Building
With Panoramic View,
All Newer Appliances

$269,000



**Markham/Denison**
Well Maintained Large 3 Bedrooms And
2 Full Washrooms Condo Unit, Newer Paint,
Close To All Amenities, Good Location.

$286,900



**Eglinton/Bellamy**
Very Good Location, Condo Townhome
3 Bedrooms, 3 Washrooms
Custom Made Maplewood New Kitchen
Close To All Amenities

$309,900



**Mccowan/Finch**
3+1 Bedrooms Link Home
Lots Of Upgrades, Very Good Neighborhood
Close To Schools, Mall, Library, Ttc.

$320,000



**Brimley/Eglinton**
Well Maintained
3+2 Bedroom Condominium
2 Washrooms, Beautiful Lay Out
Sep Entrance , Good Location

$349,900



**14th/9th Line**
Well Maintained New Condo
3 +1 Bedrooms Semi Detached
3 Washrooms, 'Green Park Built' Fully
Upgraded Home, Granite Countertops
Newer Appliances

$489,000



**14th Ave/9th Line**
Luxury Living In Brookfield's Model Home
4+1 Bedrooms Detached, 2 Kitchens,
4 washrooms, Tons Of Upgrades
Schools, Good Location

$569,000



**Bayview/Major Mackenzie**
High Demand Location. 4 Br Plan. 2 Huge Mbr.
Bayview Secondary School Area, Steps To
Elementary Schools, Park, Close To Shops &
Community Center. No Side Walk.
Double Door Entrance

$579,000



**Islington/Rutherford**
4 Bedrooms, 3 Washrooms Detached Home
A Show-Piece Home, Absolutely Stunning,
Approx. 2800 Sq. Ft.

$629,000



**Steeles/Midland**
Well Maintained 4 +1 Bedrooms
Detached Home 4 Washrooms,
Brand New Detached House With
Double Attached Garage In Great Location

For Sale or Rent




**Middlefield/Finch**
Very good neighborhood
Open Any Business
Affordable Rent
Lots of parking

